வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 20.02.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 51 பக்கங்கள் : 12







# திறன்மிக்க இளைஞர்கள் புலம்பெயர்வு இலங்கை பொருளாதாரத்தில் தாக்கம்!

## மத்திய வங்கி அறிக்கை சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்ரவரி 20

**திறன்மிக்க இளைஞர்களின் புலம்பெயர்வு காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனை மத்திய வங்கியின் அறிக்கையொன்று சுட்டிக்காட்டியுள்ளது.**

திறன்மிக்க இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு படையெடுப்பது உற்பத் தித் திறனை பாதிப்பதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

உலகத் துறையில் சாதகமற்ற போக்குகள் ஏற்றுமதித் துறையின் மீட்சியையும், திறன்மிக்க இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு படையெடுப்பது உற்பத் தித் திறனையும் பாதிக் கிறது.

இதன் காரணமாக குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சி குறையும் அபாயம் உள்ளது.




தற்போது கணிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குறுகிய காலத்திற்கு இலங்கையின்

11

# புலிகளுக்கு நான் எதிரானவனல்லன்

## கூறுகிறார் அத்துரலிய ரதன தேரர்



கொழும்பு, பெப். 20

விடுதலைப் புலிகளுக்கு தான் எதிரானவன் கிடையாது என்று அத்துரலியே ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுநிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னைப் பற்றி பெரும்பாலானவர்கள் நான் சிங்கள இனவாதி, புலிகளுக்கு எதிரானவன் என்று கற்பிதம் செய்து கொண்டிருக்கின்றார்கள் ஆனால் நான் அப்படியானவன் இல்லை.

11


# இலங்கையின் இறையாண்மை அமெ. தொடர்ந்தும் உதவும்!

## உறுதியளித்தார் உதவி இராஜாங்க செயலர்

கொழும்பு, பெப். 20

இலங்கையின் இறையாண்மையை பாதுகாக்க அமெரிக்கா தொடர்ந்தும் உதவும் என தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்துள்ளார்.

இந்தோ-பசிபிக் மூலோபாயம் குறித்து அமெரிக்க அமைதி நிறுவனத்தில் பேசிய டொனால்ட் லூ, இலங்கைக்கு ரோந்து படகுகள் மற்றும் விமானங்களை வழங்குவதன் மூலம் இது செயல்படுத்தப்படும்




என்றும் கூறினார்.

"அமெரிக்க அரசாங்கம்

11

# கல்வித்துறையை டிஜிற்றல் மயமாக்கும் முன்னோடித் திட்டம் மார்ச்சில் ஆரம்பம்

கொழும்பு, பெப். 20

கல்வித்துறையை டிஜிற்றல் மயமாக்குவதற்கான முன்னோடித் திட்டத்தை மார்ச் மாதம் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடப் புத்தகங்களை விநியோகத்திற்காக அனுப்பும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர்:

2024 ஆம் ஆண்டிற்கான பாடசாலைப் பாடப் புத்தகங்கள் யாவும் விநியோகத்திற்காக அனுப்பப்பட்டுள்ளன. மார்ச் முதலாம் திகதியாகும் போது பாடசாலைகளில் விநியோகப் பணிகள் நிறைவு செய்யப்படும். இதற்காக 12,000 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

அத்துடன்

11

# இலங்கையின் நிலைமைக்கு ஜே.வி.பியினரும் பங்காளிகள்

## வஜிர அபேவர்தன குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 20

பொய்யான அரசியல் வாக்குறுதிகள் வழங்கப்பட்டதில் ஜே.வி.பியினரும் பங்காளிகள். ஜே.வி.பி.வரலாற்றில் அரசாங்கங்களை அமைக்கவும் கவிழ்க்கவும் உதவிய கட்சி என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்

11

# சந்திரிகா - மைத்திரி கூட்டணி; உடன்படிக்கை குறித்து இழுபறி

கொழும்பு, பெப். 20

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன இடையே தற்போது இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதாக தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களிலிருந்து தகவல் கசிந்துள்ளது.

இவர்கள் இருவரின் இணைத்தலைமையில் புதிய அரசியல் கூட்டணி ஒன்று உருவாக்குவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டு வந்த நிலையில்,

11

# அல்லைப்பிட்டியில் விபத்து; பெண்ணொருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

அல்லைப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

மண்கும்பான் 4ஆம் வட்டாரம் பகுதியை சேர்ந்ததங்கரத்தினம் தனேஸ்வரி (வயது 46) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த பெண் பஸ்ஸில் இறங்க முற்பட்ட வேளை சாரதி பஸ்ஸை நகர்த்தியமையால் தவறி விழுந்துள்ளார்.

அதில்

11

# மக்களிடமிருந்து தகவல்களை தடுக்கும் முயற்சிகளை அரசு தீவிரப்படுத்தும் போது நாம் குரல் கொடுக்கவேண்டும்!

## அமெரிக்க துணை இராஜாங்க செயலர் வலியுறுத்து



கொழும்பு, பெப். 20

இணைய அணுகலை கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொது மக்களிடமிருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப்படுத்தும்போது, அதற்கெதிராக நாம் குரல் கொடுக்க வேண்டுமென பொது உறவுகளுக்கான துணை இராஜாங்க செயலாளர் எலிசபெத் அலன் தெரவித்தார்.

இலங்கையின் பாராளுமன்றம் ஜனவரி மாதம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றியபோது, கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் அது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான விளைவுகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்தது என்றும் குறிப்பிட்டார்.

"உலகளாவிய ஊடக பரப்பும் ஜனநாயகத்தின்

11

## இப்படியும் நடக்கிறது

கடந்த வருடம் தந்தை செல்வா கலையரங்கில் அரசியல் கட்சிகள் பங்குபற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றிருந்தது. பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக நடந்த அந்தக் கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டபீடத்தின் தலைவர் கோசலை மதன் ஆற்றிய உரையில் பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

அவர் தெரிவித்த ஒரு விடயம் அங்கு பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு மாகாண சபையும் கிழக்கு மாகாண சபையும் இணைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த இணைப்புத் தொடர்பாக கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியிருந்தது.

ஆனால், அப்படி ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தாலும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்திருப்பார்களா என்ற சந்தேகம் இருக்கின்றது. ஏனெனில், நாம் வடக்கு - கிழக்கு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியையும் செய்யவில்லை என்ற கவலையை அவர் அன்று வெளிப்படுத்தியிருந்தார்.

இன்று நடக்கின்ற சம்பவங்கள் அதனை மெய்ப்பிப்பது மாத்திரமல்ல, இப்போது கிழக்கு மாகாணத்திலேயே மட்டக்களப்பு - திருகோணமலை- அம்பாறை என்று பிரிந்துவிடுவோமோ என்ற கவலையை ஏற்படுத்தியிருக்கின்றது தமிழ் அரசிலி இன்று இடம்பெற்றுவரும் சம்பவங்கள்.

பொதுச்செயலாளர் பதவி கிழக்குக்கு என்றால் அது மட்டக்களப்புக்கு அல்லவா என்கின்றனர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். இந்த நிலை தொடர்வது தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

இந்த நிலையை மாற்றுவதற்கு வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு என்னவெல்லாம் செய்யலாமோ அதனை செய்வதற்கு இப்போதிருந்தே நாம் உழைத்தாக வேண்டும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தபோது அது அம்பாறைக்கே கொடுக்கவேண்டும் என்று சிலர் முடிவெடுத்து அங்கு தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஒருவருக்கு அவசரம் அவசரமாக வழங்கப்பட்டது.

அந்தத் தேர்தலில் அம்பாறையிலிருந்து ஒரு தமிழ் பிரதிநிதியும் தெரிவுசெய்யப்படவில்லை என்பதால் அவர்களின் தேவையை நிறைவுசெய்வதற்காக அம்பாறைக்கு வழங்குவதாக அப்போது சொல்லப்பட்டது. அது சொன்ன செய்தி என்ன?

அம்பாறையின் தேவையை அம்பாறையைச் சேர்ந்த ஒருவர்தான் நிறைவேற்றவேண்டும் என்பதா? அந்தக் கட்சியில் அம்பாறை மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அல்லது அம்பாறை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர் ஒருவர் அம்பாறைக்கு வெளியே இல்லை என்பதுதானே?

அதுபோலத்தான், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தது. அந்த ஆசனம் கிடைப்பதற்கு கிழக்கு மக்களும் பங்களித்திருந்தார்கள். ஆனால், அந்த தேசியப் பட்டியல் ஆசனம் மற்றுமொரு யாழ்ப்பாணத்தவருக்கே வழங்கப்பட்டது.

இந்த நிலையை மாற்றியமைத்து, தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற நிலையை முதலில் நமது தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்படுத்தவேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகள் என்றால், தமிழர் தாயகத்தை முழுமையாக பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளே தமிழ்த் தேசியக் கட்சிகளாக இருக்கமுடியும்.

வடக்கு - கிழக்கில் ஒரு நல்லெண்ண முயற்சியாக அடுத்த தேர்தலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாவை சேனாதிராஜாவை (அவரை ஓர் உதாரணமாகவே இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன்) மட்டக்களப்பிலோ அல்லது அம்பாறையிலோ போட்டியிட்டு அவரை அங்குள்ளவர்கள் தமது பிரதிநிதியாக தெரிவுசெய்ய வேண்டும். திருகோணமலையில் அடுத்த தேர்தலில் சம்பந்தன் ஐயா போட்டியிடுகின்ற நிலைமை இருக்காது என்பதால் அங்கும் ஒரு பிரபல தலைவர் ஒருவரை- திருகோணமலையோடு தொடர்புடைய முன்னாள் எம். பி. சரவணபவனையோ அல்லது சிறிகாந்தா போன்ற ஒருவரையோ போட்டியிடச் செய்யவேண்டும். ஏற்கனவே ஒருதடவை சிறீகாந்தா திருகோணமலையில் போட்டியிட்டு பல ஆயிரம் வாக்குகளைப் பெற்றவர்.

அதேபோல மட்டக்களப்பு யோகேஸ்வரனையோ அல்லது அரியநேத்திரனையோ யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெறச் செய்யவேண்டும். இப்படி வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பது பற்றி கட்சித் தலைவர்கள் சிந்திக்கவேண்டும். இதுவே வடக்குக்கும் கிழக்குக்குமான உண்மையான நல்லுறவை ஏற்படுத்தும்.!

**- ஊர்க்குருவி.**

# இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என்பது கோழைத்தனமான கூற்று

## ஹரினை சாடுகிறார் விமல்

கொழும்பு, பெப். 20

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பகிரங்கமாக கூறியிருப்பது பாரதூரமான கருத்து என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் உள்ளிட்ட அனைத்தும் இந்தியாவிற்கு வழங்கப்படுவதனை குறிப்பிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து கருத்துரைத்த விமல் வீரவன்ஸ, 'இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என்பது கோழைத்தனமானது. இலங்கையில் இந்திய அடிமைத்தனம் எவ்வளவு தீவிரமாக இருக்கிறது? இந்த அரசாங்கமும், ஆட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் எதிர்க் கும்பல்களும் எந்த அளவுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்கள்?

இலங்கையை இந்தியாவுடன் இணைப்பதற்கான சிறந்த நேரம் வந்துவிட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள் என்பது அந்த அறிக்கையிலிருந்து தெளிவாகிறது.

அமைச்சர் ஒருவர் குறிப்பிட்ட நாட்டுக்குச் சென்று தமது நாடு அந்நாட்டின் ஒரு பகுதி என்று கூறுவது பாரதூரமானதல்லவா? அத்தகைய அறிக்கையை வெளியிட அவருக்கு தார்மீக மற்றும் சட்ட அதிகாரம் உள்ளதா?

தாம் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்யும்போது நாட்டின் ஐக்கியத்தையும் இறையாண்மையையும் பாதுகாப்பதாக கூறிவிட்டு, அதனை எந்த பாராளுமன்ற உறுப்பினரும் மீற முடியாது-என்றார். (அ)

# அவதூறை ஏற்படுத்தவேண்டாம்!

## மிகிந்தலை தேரரிடம் கோருகிறார் அநுர

கொழும்பு, பெப். 20

பல்வேறு அரசியல் நோக்கங்களின் பகடைகாயாக மாறி தமது கட்சிக்கு அவதூறை ஏற்படுத்த வேண்டாம் என மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதியிடம் மிகக்கௌரவமான முறையில் கோரிக்கை விடுப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

"குறிப்பாக எனது இந்திய விஜயத்தின் பின்னர் நாட்டின் அரசியல் கட்சிகள் மிகவும் குழப்பமடைந்திருப்பது அதிசயமல்ல.

எனினும் அதில் நாட்டின் பிக்குமாரை பயன்படுத்தி வருவது பாரதூரமான பிரச்னை என்பதுடன் அது பௌத்த தர்மத்திற்கு செய்யும் அவமதிப்பு.

இந்திய விஜயத்தின் போது தேசிய மக்கள் சக்தியின் தேசிய பணிகளுக்காக 300 கோடி ரூபாய் வழங்கப்பட்டது என மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தெரிவித்துள்ள கருத்து தற்போது சமூக ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.

300 கோடி ரூபாயை இந்தியா வழங்கியது என்பது முற்றிலும் பொய்யானது.

இதனால், பௌத்த தர்மத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில், அரசியல் கட்சிகள் பௌத்த பிக்குமாரை பயன்படுத்துவதை நிறுத்துமாறும் சம்பந்தப்பட்ட கட்சிகளிடம் வலியுறுத்துகிறோம்.

பல்வேறு பொய்யான விடயங்களை காலத்திற்கு காலம் கொண்டு வந்து, சேறுபூசும் நடவடிக்கையானது எனது அரசியல் வரலாற்றில் பழகிப்போன ஒன்று" எனவும் அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

(அ)

## மாசுவன் சந்தியில் ஓட்டோமீது தாக்குதல்




யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம் நகரிலிருந்து ஆவரங்கால் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோ மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இராசவீதி, மாசுவன் சந்திக்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், ஆவரங்கால் மேற்கை சேர்ந்த பாபனா ஜெயம் சகீதரன் என்பவரின் ஓட்டோ தாக்குதலுக்கு உள்ளானது.

ஓட்டோ சாரதி கூக்குரலிட்டதையடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

ஓட்டோவின் கண்ணாடி சேதமடைந்துள்ளது. சாரதி காயங்கள் இன்றித் தப்பினார். (ஐ)

## கட்சி அரசியல், கொள்கைகளை விட மக்களை காப்பதே அரசுக்கு முக்கியம்

### மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20

கட்சி அரசியல் மற்றும் கொள்கைகளை விட மக்களை பாதுகாப்பதே அரசாங்கத்திற்கு முக்கியமானது என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து அடைந்த நாட்டை எந்தவொரு நபரும் பொறுப்பேற்காத நிலையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்று பொருளாதார ரீதியில் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதனை உலக நாடுகள் ஆச்சரியமாக நோக்குவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வங்குரோத்து அடைந்த ஒரு நாடு 18 மாதத்தில் இவ்வாறான தொரு வளர்ச்சியை காண்பது இலகுவான விடயமல்ல எனவும், அன்று அனைவரையும் போன்று ஜனாதிபதியும் நாட்டை பொறுப்பேற்றிருக்கா திருந்தால் இது சாத்தியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அனைத்து அரசியல் கட்சிகளையும், மக்களையும் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்படுவதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (அ)

## அடிப்படை உரிமைகளை மீறாமல் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள்

### பொலிஸாருக்கு அறிவுறுத்து

கொழும்பு, பெப். 20

அடிப்படை உரிமைகளை மீறாத வகையில் சுற்றிவளைப்புகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு தொடர் அறிவுறுத்தல்களை வழங்க சட்ட மா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சட்ட மா அதிபர் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
20.02.2024 செவ்வகிழமை
சோபகிருது வருடம், மாசி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்காவின் அறிவிப்பை புரிந்துகொள்ளுதல்

இலங்கையின் இறையாண்மையை பாதுகாப்பதற்கு அமெரிக்கா உதவுமென்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலர் டொனாலட் லூ தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, இலங்கை இராணுவத்தின் கரையோர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் படகுகளை வழங்கவுள்ள தகவலையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

நமது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அமெரிக்காவிடம் முறையிட்டுக்கொண்டிருக்கின்ற சூழலில் அமெரிக்காவின் நகர்வுகளோ இலங்கை அரசை பாதுகாக்கும் நோக்கிலேயே அமைந்திருக்கின்றன – இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அமெரிக்கா அதன் நீண்டகால நலன்களின் அடிப்படையில்தான் விடயங்களை முன்னெடுக்கும். அமெரிக்கா போன்ற ஓர் உலகசக்தி அப்படித்தான் சிந்திக்கவும் முடியும்.

ஆனால், டொனால்ட் லூ குறிப்பிடும் இறைமை என்ன என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும் – மேலோட்டமாக நோக்கினால், அவர் இலங்கையின் பொதுவான இறைமை தொடர்பில் பேசுவது போன்று தெரியும். ஆனால், விடயம் அதுவல்ல. 2020இல், அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அவர் புதுடில்லியில் தனது சந்திப்புகளை நிறைவு செய்துகொண்டே இலங்கை விஜயத்தைத் திட்டமிட்டிருந்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது, இலங்கையின் இறைமை தொடர்பில் பேசியிருந்தார். அதாவது, சீனா, இலங்கையின் இறைமையை கடலிலும் நிலத்திலும் பாரதூரமாக மீறி வருவதாக குறிப்பிட்டிருந்தார் – அத்துடன், சீனாவை ஒரு பிரிடேட்டர் என்றும் வர்ணித்திருந்தார் – இதன் மூலம், அவ்வாறான பிரிடேட்டரிடமிருந்து, இலங்கையின் இறைமையை காப்பாற்றுவது தொடர்பிலேயே அவர் பேசியிருந்தார். இதன் தொடர்ச்சியாகவே லூவின் கருத்தை நோக்க வேண்டும். இறைமை தொடர்பில் பேசிவிட்டு மறுபுறமாக, கடலோர கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தற்கான இராணுவ உதவிகளையும் அமெரிக்கா அறிவித்திருக்கின்றது.

இலங்கையின் இறைமையை சீனா கடலிலும் நிலத்திலும் மீறி வருகின்றது என்பது வடக்கில் மீன்பிடித் துறையில் சீனா ஆர்வம் காண்பிக்கும் விடயம் வரையில் நீண்டுசெல்கின்றது. இந்த விடயங்களை தமிழ்க் கட்சிகள் ஆழமாக நோக்குவதில்லை. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பேசியவுடன் இது இந்தியாவுடன் தொடர்புடையது என்று தங்களுக்குத் தாங்களே வகுப்பெடுத்துக் கொள்கின்றனர் – உண்மையில், சீனா தொடர்பான உலகளாவிய கரிசனையை அமெரிக்கா மட்டுமே கொண்ருக்கின்றது. அமெரிக்க – சீன போட்டியில்தான் இந்தியாவும் தொடர்புபடுகின்றது. மாலைதீவு நெருக்கடியை தொடர்ந்தே அமெரிக்க உயர் அதிகாரிகள் தெற்காசிய விஜயத்தை மேற்கொண்டிருக்கின்றனர். தெற்காசியாவை பொறுத்த வரையில், சீன விவகாரத்தை கையாளுவதில், இந்தியாவும் அமெரிக்காவும் தனித்தனியானது அல்ல – மாறாக இரண்டும் ஒரு புள்ளியில் சந்திப்பது. இந்த அடிப்படையில்தான் தமிழ் அரசியல் தரப்புகள் இந்தியாவின் கரிசனைகளை புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர் விகாரத்தில் அமெரிக்கா தனியாக நகரக் கூடியது என்று எவரேனும் கருதினால் – அது அடிப்படையிலேயே தவறானது. தற்போதுள்ள உலக அரசியல் சூழலில் தமிழர் விவகாரமோ, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இந்த உண்மையை புரிந்துகொண்டால் மட்டும்தான் நாம் என்ன செய்வது? – என்ன செய்வது பொருத்தமானது? – என்னும் தீர்மானத்திற்கு வர முடியும்.

# நொச்சிக்குளத்தில் துப்பாக்கிச் சூடு; கண்டித்து மக்கள் நேற்று வீதி மறியல்



*மன்னார், பெப். 20*

விவசாயியை இலக்கு வைத்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி நொச்சிக்குளம் மக்கள் பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மன்னார் - மதவாச்சி பிரதான வீதியை வழிமறித்தே மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று காலை 8.30 மணியளவில் நொச்சிக் குளம் பகுதியில் வயலில் நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த விவசாயி ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

மோட்டார் சைக்களில் வந்த இருவர் ரி - 56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி இந்த சூட்டுச் சம்பவத்தை நடத்திவிட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

கடந்த சில காலமாக இந்த கிராமத்து மக்களின் மீது ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தி இது வரை மூவர் உயிரிழந்தனர் என்று அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்த கிராமத்துக்கு பொலிஸ் காவல் போடப்பட்டும் அதையும்மீறி நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதனைக் கண்டித்தே நொச்சிக்குளம் கிராம மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகள் ஏந்தியிருந்தனர். அவற்றில், ‘கொலைகாரர்களுக்கு ஆயுதம் கொடுத்தது யார்?’, ‘எங்களை பாதுகாப்பது அரசின் கடமை’, ‘எங்கள் உயிருக்கு பாதுகாப்பு தாருங்கள்’, எங்கள் மக்களுக்கு நீதி இல்லையா?’, ‘யார் தருவது’ போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

மேலும், இந்தத் துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் உடன் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக மன்னார் மற்றும் உயிலங்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து மன்னார் நகருக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அம்புலன்ஸ் வாகனங்களை இயக்குவதற்கு 40,000 தொன் டீசல் வழங்கியது ஜப்பான்!

*கொழும்பு, பெப். 20*

நாட்டின் சுகாதாரத் துறையின் போக்குவரத்து சேவையை வலுப்படுத்தும் நோக்கில் ஜப்பான் அரசாங்கம் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை நன்கொடையாக வழங்கியுள்ளது.


அம்புலன்ஸ் வாகன சேவைகளை இயக்குவதற்கே இந்த டீசல் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்தில் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

மேலும், டீசல் விநியோகத்தின் வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக, அதிகாரிகள் அதிநவீன எரிபொருள் முகாமைத்துவ தகவல் அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இது சுகாதார நிறுவனங்கள் முழுவதும் டீசல் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கும் அத்துடன், வாகனங்கள் மற்றும் வசதிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடுகளின் விரிவான பதிவுகளை பராமரிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**பெப்ரவரி - 20 செவ்வாய்க்கிழமை**
சோபகிருது வருடம் - மாசி 08
நல்ல நேரம் : 03.32 - 05.02
ராகு காலம் : 11.02 - 02.32
திதி : ஏகாதசி




**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். சகோதரர்களால் பகை வரக்கூடும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசிவசூலிப்பீர்கள். உழைக்க வேண்டியநாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. புது வேலை அமையும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**துலாம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கிய பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் நீடிப்ப தால் வேலைச்சுமை இருந்துகொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உதவி கேட்டு உறவினர்கள் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம்.

**தனுசு**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. விலை உயர்ந்தப் பொருட்களை வாங்குவீர்கள். தாயார் ஆதரித்துப் பேசுவார். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். அனாவசியச் செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும்.

# தமிழ்நாடு மீனவர்கள் கைது பிரதமர் தலையிட வேண்டும்!

## முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, பெப். 20

தமிழ்நாடு மீனவர்கள் கைது தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி இராஜதந்திர ரீதியாக தலையிட வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை கண்டித்தும் படகுகளை இலங்கை அரசு நாட்டுடைமையாக்குவதை கண்டித்தும் இராமேஸ்வரத்தில் படகுகளில் கறுப்புக்கொடியை கட்டி 700 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் இந்திய முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி இராஜதந்திர ரீதியாக தலையிட வேண்டும். மூன்று மீனவர்கள் நீண்ட காலம் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். படகுகள் இலங்கை அரசால் தேசியமயமாக்கப்பட்டுள்ளன.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்வது கவலை அளிக்கிறது. தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படுவதை பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி செய்ய வேண்டும்.

மீனவர்களின் நலனை பாதுகாக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுப்பது முக்கியம். ஏனென்றால் அவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல. பெருமைமிக்க இந்தியர்கள்." என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ்நாடு அரசாங்கத்தை அச்சுறுத்துகிறது மத்திய அரசு

ஈரோடு, பெப். 20

தமிழக அரசையும், அமைச்சர்களையும் மத்திய அரசு தினமும் அச்சுறுத்துகிறது என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு கூறினார்.

ஈரோடு மாவட்டத்தில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

பா. ஜ. க. ஆட்சியில் 5 மாநில விவசாயிகள் விளை பொருட்களுக்கு உரிய விலை கேட்டு போராடி வருகின்றனர். இதற்குமத்திய அரசு செவி சாய்க்கவில்லை. மாநில முதல்வர்களே டில்லிக்குச் சென்று போராட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுவரை இல்லாத வகையில், தமிழக அரசையும், அமைச்சர்களையும் மத்திய அரசு தினமும் அச்சுறுத்துகிறது. ஆளுநர் என்பது மரியாதைக்குரிய பதவி. ஆனால், ஆளுநர்களை வைத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை செயல்படவிடாமல் செய்துகொண்டிருக்கும் நிலை மாற வேண்டுமெனில், மத்தியில் இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வரவேண்டும்.

தென் மாநிலங்களில் பா. ஜ. க 10 இடங்களில்தான் வெற்றி பெறும். மற்ற இடங்களில் மாநில கட்சிகள்தான் வெற்றி பெறும் - என்றார். (ஐ)

# மேகதாது அணை கட்டும் முயற்சியை தமிழக முதல்வர் தடுக்க வேண்டும்!

## தமிழ்நாடு பா. ஜ. க. வலியுறுத்து

கோவை, பெப். 20

மேகதாது அணை கட்ட நடவடிக்கை மேற்கொண்டு வரும் கர்நாடக அரசின் முயற்சிகளை முதல்வர் மு. க. ஸ்டாலின் முறியடிக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினரும் பா. ஜ. கவின் தேசிய மகளிரணி தலைவியுமான வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கர்நாடக மாநில அரசின் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசிய அம்மாநில முதலமைச்சர் சித்தராமையா, காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்துள்ளோம். முறையான அனுமதி பெற்று விரைவில் அணையின் கட்டுமானப் பணிகளை தொடங்குவோம் என்று அறிவித்துள்ளார்.

காவிரியாறு பாயும் தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் காவிரியாற்றின் குறுக்கே கர்நாடகா எந்த அணையையும் கட்ட முடியாது. இதை காவிரி நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதிப்படுத்தியுள்ளன. உச்ச நீதிமன்ற தீர்ப்பை மீறி காவிரியாற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்டுவோம் என்று கர்நாடக சட்டப்பேரவையில் அந்த மாநில முதலமைச்சர் அறிவித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

மேகதாது அணை இல்லாத போதே, நடுவர் மன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, வறட்சியான காலங்களில், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை வழங்க கர்நாடகா மறுத்து வருகிறது. இத்தகைய சூழலில், மேகதாது அணை கட்டப்பட்டால், தமிழகத்துக்கு இப்போது கிடைக்கும் குறைந்த அளவு தண்ணீரும் கிடைக்காமல் போய்விடும். இந்த முயற்சியை முறியடிக்க வேண்டியது தமிழக அரசின் கடமையாகும். கர்நாடக அரசின் முயற்சிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முறியடிக்க வேண்டும். இதற்கு சட்ட ரீதியான தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# பிரிந்த சக்திகள் இணைந்தாலே அ. தி. மு. கவுக்கு வெற்றி கிட்டும்

## பன்னீர்செல்வம் கூறுகிறார்

மதுரை, பெப். 20

பிரிந்து கிடக்கும் சக்திகள் இணைந்தால்தான் அ. தி. மு. கவுக்கு வெற்றி கிடைக்கும் என ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

மதுரையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

மக்களவைத் தேர்தலுக்கான கூட்டணிப் பேச்சு தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த தேர்தலில் சசிகலா, டி. டி. வி. தினகரன், நாங்கள் என மூவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே தொண்டர்களின் விருப்பம். எங்களைப் பொருத்தவரை பா. ஜ. கவையும், அதன் மத்திய அரசையும் முழுமையாக ஆதரிக்கிறோம். 10 ஆண்டுகள் சிறப்பான ஆட்சியை பா. ஜ. க. தந்துள்ளதால் ஆதரவைத் தவிர மாற்றுக் கருத்துக்கே இடம் இல்லை.

பிரிந்து கிடக்கும் அ. தி. மு. கவின் சக்திகள் ஒன்றிணைந்தால்தான் அ. தி. மு. கவுக்கு வெற்றி கிடைக்கும் - என்றார். (ஐ)



# 13ஆவது திருத்தம் இந்தியா மௌனம்

## வியப்பாக உள்ளது என்கிறார் அநுர

கொழும்பு, பெப். 20

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந் திய தரப்பில் எதுவும் பேசப்பாடமை எமக்கு வியப் பாக இருந்தது - என்று தேசிய மக்கள் சக்தியின் தலை வரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ஐந்து நாட்கள் பயணம் மேற்கொண்டு அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் குழு டில்லி சென்றிருந்தது. இந்திய வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் தேசிய மக்கள் சக்தியினர் சந்திப்புகளை நடத்தினர்.

அமுல் உள்ளிட்ட சில நிறுவனங்களுக்கும் கண்காணிப்பு பயணம் மேற்கொண்டனர். இடதுசாரி ஆட்சி நடைபெறும் கேரள மாநிலத்துக்கும் சென்றிருந்தனர்.

இந்திய விஜயத்தின் பின்னர் அவ்விஜயம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தலை வர் முதன்முறையாக ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் நேர்காணல் வழங்கி இருந்தார்.

இதன்போது - இந்தியாவில் நடைபெற்ற சந்திப்புகளின் போது மாகாணசபை முறைமை மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி பேசப்படவில்லையா என எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"உண்மையில் இது குறித்து அவதானமே செலுத்தப்படவில்லை. இது பற்றி பேசப் படாமை எமக்கும் வியப்பாக இருந்தது. எனினும், ஒரே யொரு சந்தர்ப்பத்தின்போது தமிழ், முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பை பெற உள்ள உங்களிடம் வேலைத்திட்டம் என்னவென்று குழுவொன்றினால் எம்மிடம் கேட்கப்பட்டது. அதற்கு நாம் பதில் வழங்கினோம்.

2005இல் தமிழர்களுக்கு எதிராகவே மஹிந்த ஆட்சிக்கு வந்தார். தமிழர்கள் தோற்று விட்டனர் எனக்கூறி 2010 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். 2019 இல் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தார். மற்றைய தரப்புக்கு எதிராகவும், அவர்களுக்கு வலியை ஏற்படுத்தியுமே ஆட்சிக்கு வருகின்றனர்.

நாம் இந்த அணுகுமுறையை பின்பற்றும் கட்சி அல்ல. அனைவரையும் இணைத்துக்கொண்டு இந்த ஆட்சியை விரட்டவே எதிர்பார்க்கின்றோம். எமது ஆட்சில் வடக்க, கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் எம்.பிக்களும் எமது அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற நோக்கில்தான் செயற்படுவருகின்றோம். அவர்களின் வழி பிரித்தாள்வது. எமது வழி இணைந்து பயணிப்பது எனக் கூறினோம்."
- என்று அநுரகுமார திஸாநாயக்க பதலளித்தார்.

அத்துடன், வடக்கில் உள்ள கட்சிகளுடன் எவ்வாறு செயற் பட வேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டாதா என்ற வினாவுக்கு , பதிலளித்த அநுரகுமார திஸாநாயக்க "அவ்வாறு எந்தவொரு பேச்சும் இடம்பெறவில்லை. இராஜதந்திர ரீதியில் அது ஏற்புடைய காரணியும் அல்ல" - என்று குறிப்பிட்டார். (அ)

# அரசாங்கத்தின் ஆயுட்காலம் இவ்வருடத்துடன் முடிந்துவிடும்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு



கொழும்பு, பெப். 20

அரசாங்கத்தினால் நாட்டு மக்களின் நலன்களை முன்நிறுத்திக்கொண்டு, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டை எட்ட முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்த சாபக்கேடான அரசாங்கத்தின் ஆயுட்காலம் இவ்வருடத்துடன் முடிந்து விடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொலனறுவையில் அமைந்துள்ள கதுருவெல, அல்-மினா மகா வித்தியாலத்தில் இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்குரோத்தான நமது நாட்டில் மக்களை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. இன்று நாட்டில் தோல்வியடைந்த அரசாங்கமே ஆட்சியில் இருந்து வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களைக் கொல்லாமல் கொன்று வருகிறது.

இந்த அரசாங்கத்திற்கு மக்கள் பக்கம் இருந்து சர்வதேச நாணய நிதி உடன்பாட்டை எட்ட முடியவில்லை.

220 இலட்சத்துக்கும் அதிகமான மக்களை பொருட்படுத்தாது பெரும் செல்வந்தர்களையே இந்த அரசாங்கம் பாதுகாக்கின்றது.

சாதாரண மக்களின் பேச்சு சுதந்திரத்தையும் ஜனநாயக சுதந்திரத்தையும் அரசாங்கம் இன்று பறித்துள்ளது.

இணையப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றை பயன்படுத்தி மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

உண்மையை அறியும் உரிமையைப் பறிக்க முயற்சித்து வருகின்றனர். இவ்வாறான அரசாங்கமொன்றில், நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர்.

சாதாரண மக்கள் 3 வேளை உணவு உண்பதற்கு சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த சாபக்கேடான அரசாங்கத்தின் ஆயுட்காலம் இவ்வருடத்துடன் முடிந்து விடும்- என்றார். (அ)

# வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கு பெரும் பற்றாக்குறை!

கொழும்பு, பெப். 20

அரசாங்க மருத்துவமனைகளில் சத்திரகிசிச்சை உபகரணங்கள் உட்பட மிகவும் அவசியமான மருத்துவ உபகரணங்களிற்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார தொழில்துறை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

உணவுக்குழாய் ஸ்டென்ட் போன்றவற்றிற்கும் பற்றாக்குறை நிலவுவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளிற்கான மருத்துவ ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

மிகவும் அவசியமான சத்திரகிசிச்சை உபகரணங்களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது 3800 முதல் 5800 வரையிலான உபகரணங்கள் முற்றாக முடிவடைந்துவிட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவசர சேவைகளிற்கு தேவையான மருத்துவ உபகரணங்களும் பற்றாக்குறையாக உள்ளன என மேலும் தெரிவித்துள்ள அவர் இதன் காரணமாக கடும் கரிசனை ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இது குறித்து கருத்து தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு அதிகாரியொருவர், உபகரணங்கள் இன்மையால் சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டதாக உத்தியோகபூர்வமான தகவல்கள்எவையும் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளார். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, பெப். 20

வவுனியா, தம்பனைச்சோலை பகுதியில் ஐஸ் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த நபர் ஒருவரை வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

அந்தப் பகுதியில் போதைப் பொருள் விற்பனை இடம் பெறுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் அதிகாரியின் வழிகாட்டலில் வவுனியா மது ஒழிப்பு பொலிஸ் பிரிவின் நிலையப் பொறுப்பு அதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஸ்வி தலைமையில் பொலிஸ் சார்ஜன்டகளான கீர்த்தி ரத்தின, சொய்சா, டிசா நாயக்க, பொலிஸ் கொஸ்தாபர்களான குமார, விதுசன் ஆகியோரால் தம்பனைச்சோலை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் விசேட சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது ஐஸ் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அதனை உடமையில் வைத்திருந்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தல்; சாத்தியம் இல்லை!

## பிரதி சபாநாயகர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 20

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நிரந்தரமாக இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கான சாத்தியம் கிடையாது என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தேர்தல் ஒன்று இடம்பெறுகையில் பல விதமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றமை அனைவரும் அறிந்ததே. எமது நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அடுத்ததாக ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும்.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற வில்லையாயின் அதற்கும் சில காரணங்கள் உள்ளன.

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு கடந்த காலங்களில் பல தலைவர்கள் முயற்சித்தனர்.

எனவே நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி முறைமையை நிரந்தரமாக இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறாமல் இருக்கலாம்.

அவ்வாறு இல்லையெனில் நிச்சயமாக தேர்தல் இடம் பெறும். எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தொடர்பில் நாம் இதுவரை தீர்மானம் மேற்கொள்ளவில்லை -என்றார். (அ)

# எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட முடிவு!

கொழும்பு, பெப். 20

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை எதிர்வரும் மார்ச் மாதமளவில் அமைச்சரவையின் அனுமதியுடன் கைச்சாத்திடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவிற்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஏப்ரல் மாதம் குறித்த ஒப்பந்தம் நிறைவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ள நிலையில் எதிர்வரும் 2 மாதங்களுக்குள், இந்தியாவுடனான பேச்சு வார்த்தைகளை நிறைவுக்கு கொண்டு வருவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் இலங்கை அரசாங்கம் கடந்த ஆண்டு எட்கா ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையினை ஆரம்பித்திருந்தது.

இந்த ஒப்பந்தத்தின் 13 ஆவது சுற்று பேச்சுவார்த்தை கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில் மார்ச் மாதம் 10 மற்றும் 12 ஆம் திகதிகளில் அடுத்த கட்ட பேச்சு வார்த்தை இடம்பெற்று அமைச்சரவை அனுமதியின் பின்னர் விரைவில் ஒப்பந்தம் எட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதியின் சதியில் யாரும் சிக்கவேண்டாம்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, பெப். 20

**ஜனாதிபதியின் சதித்திட்ட வலையில் சிக்க வேண்டாம் என சிவில் அமைப்புக்களிடம் கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.**

**கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பேதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அரசாங்கம் பல்வேறு கருத்துக்கணை முன்வைத்து வருகின்ற அதேவேளை மறுபுறம் சிவில் அமைப்புக்கள் சில நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்ததன் பின்னர் முதலாவதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்கு வேட்புமனு கோரியதன் பின்னர் அதற்கான நிதியை விடுவிக்காமல் தேர்தலை ஜனாதிபதி அந்த தேர்தலை பிற்போட்டுள்ளார்.

ஆனால் இப்போது ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கையின் ஊடாக ஒரு விடயத்தை தெரிவித்துள்ளது.

அதாவது தேர்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என தெரிவித்துவருகின்றது.

அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும் என இப்போது கூறுகின்றனர்.

இந்த நாட்டில் தேர்தலை நடத்துவது மற்றும் அதற்கான திகதியை தீர்மானிக்கு அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே காணப்படுகின்றது.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தியே 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டது.

ஆனால் அந்த தேர்தலை நடத்தவிடாது ஜனாதபதி தன்னிச்சையாக சில தீர்மானங்களை மேற்கொண்டு தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி தேர்தலை பிற்போட்டுள்ளார்.

அதனால் தான் நாட்டில் மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவதை தடுப்பதற்கும் ஜனாதிபதியினால் தன்னிச்சையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

எனவே ஜனாதிபதியின் சதித்திட்ட வலையில் சிக்கவேண்டாம் என சிவில் அமைப்புக்களிடம் கோரக்கை விடுக்கின்றோம்.

நிதியின்மை பிரச்சினையால் தேர்தல் பிற்போடப்படவில்லை. ஜனாதிபதியும் மொட்டு தரப்பினரும் தேர்தலில் வெற்றிபெற முடியாமை காரணமாகவே தேர்தலை பிற்போட்டுள்ளனர்- என்றார். (அ)

# அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நீதிமன்றத்தை நாடும் நிலை ஏற்படும்

## கயந்த கருணாதிலக சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 20

அரசாங்கத்தின் அடக்குமுறைச் செயற்பாடுகள் தொடருமாயின் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நீதிமன்றத்தை நாடவேண்டிய நிலை ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் தொடர்ந்தும் அதிருப்தியிலேயே உள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் நாடாளுமன்றில் சில அடக்குறை சட்டமூலங்களை நிறைவேற்றி வருகின்றது.

மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறை செயற்பாடுகள் தொடருமாயின் எதிர்வரும் 190 நாட்களுக்குள் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும்.

அப்போது நாட்டு மக்கள் அந்த அரசாங்கத்திற்கு தகுந்த பாடம் கற்பிப்பார்கள்-என்றார்.

# நாடளாவிய ரீதியில் 1,017 பேர் கைது!

கொழும்பு, பெப். 20

நாடளாவிய ரீதியில் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், கடந்த 24 மணித்தியாலங்களில் 1,017 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 903 பேரும், குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 114 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் இந்த நடவடிக்கைகளின்போது, 1,386 கிராம் ஹெரோயின், 462 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள், 12,801 கஞ்சா செடிகள் உள்ளிட்ட மேலும் பல சட்டவிரோத போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# துண்டு துண்டாக வெட்டப்பட்ட நிலையில் யானையின் சடலம்!

## வவுனியாவில் அதிர்ச்சி சம்பவம்

வவுனியா, பெப். 20

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் யானையொன்று துண்டு துண்டாக வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

நெடுங்கேணி, பட்டித்திடல் பகுதியில் இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை யானையின் சடலமொன்று துண்டுதுண்டாக வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

# எலியினால் பறிபோன உயிர்!

கொழும்பு, பெப். 20

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் வசிக்கும் வீட்டுக்குள் எலி புகுந்தது தொடர்பாக இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது மயக்கமடைந்த மூத்த சகோதரர் சிகிச்சைக்காக தலங்கம மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பத்தரமுல்ல தலங்கம தெற்கில் வசிக்கும் 59 வயதுடைய ஓய்வுபெற்ற கணக்காளர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# மத்திய வங்கியின் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை!



கொழும்பு, பெப். 20

இலங்கை மத்திய வங்கியினால் உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளியிடப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குற்றம் சுமத்தியுள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிக்கையொன்றை வெளியிட்டே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்வாறான விடயங்கள் கவலையளிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்களுக்கு தீர்வு காணும் வகையில், மத்திய வங்கியினால் விடுக்கப்படும் செய்திகள் குறித்து அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், குறித்த அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# மாத்தறை வைத்தியசாலைக்கு இறக்குமதி செய்த சி.ரி ஸ்கான் இயந்திரத்தை விடுவிப்பதில் அசமந்தம்

கொழும்பு, பெப். 20

மாத்தறை பொது வைத்தியசாலைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சி.ரி. ஸ்கான் இயந்திரம் இரண்டு மாதங்களுக்கு மேலாக கட்டுநாயக்க விமான நிலைய கொள்கலன் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை விடுவிக்க சுகாதார அமைச்சு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட ஸ்கான் இயந்திரம் வெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தில் வைக்கப்படவேண்டும் எனினும் விமான நிலைய களஞ்சிய சாலைகளில் அவ்வாறான நிலை உள்ளதா என்பது கேள்விக்குறியே என சங்கத்தின் தலைவர் திரு.சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் எதிர்காலத்தில் இயந்திரத்தின் செயற்பாடு பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தற்போது மாத்தறை பொது வைத்தியசாலையில் இயங்கி வரும்சி.ரி. ஸ்கான் இயந்திரம் 18 வருடங்கள் பழைமையானது. எனவே குறைந்த எண்ணிக்கையிலான பரிசோதனைகளை மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலி!

கொழும்பு, பெப். 20

ஆராச்சிக்கட்டுவ மையாவ பகுதியில் ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

பெண் ஒருவரும் இரண்டு குழந்தைகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் தெரிவித்துள்ளது.

தனது குழந்தையையும் மற்றுமொரு குழந்தையையும் பயிற்சி வகுப்புக்கு அழைத்துச் சென்ற தாய் பயணித்த மோட்டார் சைக்கிளே இவ்வாறு ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் பாவனைக்காக பணம் கேட்ட மகனை தாக்கிக் கொலை செய்த தந்தை கைது!

கொழும்பு, பெப். 20

போதைப்பொருள் பாவனைக்காக பணம் கேட்டு தனது தந்தையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மகனை சுத்தியலால் தாக்கி கொலை செய்த தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கும்புக்கெட்டிய, வெல்கல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 30 வயதுடைய போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர். இவர் போதைப்பொருள் பாவனைக்காக பணம் கேட்டு தனது தந்தையுடன் தினமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவர் நேற்று முன் தினம் வழமைப்போல போதைப்பொருள் பாவனைக்காக பணம் கேட்டு தனது தந்தையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் தந்தை , தனது மகனை சுத்தியலால் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான 60 வயதுடைய தந்தை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர் . இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கும்புக்கெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# தேர்தலை நடத்தாவிட்டால் ரணில் வீடு செல்ல நேரிடும்!

## ஜே.வி.பி எச்சரிக்கை

**கொழும்பு, பெப். 20**

**நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்தாது பிற்போடப்படுமானால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீட்டிற்கு செல்ல நேரிடும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

குருநாகல் பகுதியில் இடம்பெற்ற அரசியல் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்ட மக்கள்மஹிந்த ராஜபக்ஷவுக்கு 5 இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளை வழங்கினார்கள்.

இதனால் என்ன பயன் கிடைக்கப் பெற்றது என்பதை குருநாகல் மாவட்ட மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் வழங்கிய மக்களாணை இன்று முழுமையாக இல்லா தொழிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனி ஆசனத்துடன் பாராளுமன்றத்திற்கு வந்தார்.

நெருக்கடியான நிலையில் அரசாங்கத்தை பொறுப்பேற்றார் என்று பொதுஜன பெரமுனவினர் தற்போது புகழ்பாடுகிறார்கள்.

2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் பிரசாரங்களில் 'மத்திய வங்கியின் பிரதான சூத்திரதாரியான ரணிலை சிறைக்கு அனுப்புவோம்' என்பது பொதுஜன பெரமுனவின் பிரதான அரசியல் வாக்குறுதியாக அமைந்தது.

அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அல்லது ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலை பிற்போட்டு தனது பதவி காலத்தை நீடித்துக் கொள்ள ஜனாதிபதி முயற்சித்தால் அவர் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் வீடு செல்ல நேரிடும் - என்றார். (அ)

# கொடுப்பனவுகள் தொடர்பிலான பேச்சு இணக்கப்பாடின்றி நிறைவு!

கொழும்பு, பெப். 20

கொடுப்பனவுகள் தொடர்பில் சுகாதார அமைச்சருடன் சுகாதார தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மேற்கொண்ட கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த கொடுப்பனவு தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இன்று சுகாதார அமைச்சருடன் மற்றுமொரு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் எட்டப்படும் முடிவினை பொறுத்து பணிப்புறக் கணிப்பை மீள ஆரம்பிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தொழிற்சங்கங்கள் முன்னதாக அறிவித்திருந்தன.

மேலதிக கொடுப்பனவுகளில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக கடந்த வாரம் அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியுற்ற நிலையில் கடந்த செவ்வாய்கிழமை முதல் 72 சுகாதார தொழிற் சங்கத்தினர் பணிப்புறக் கணிப்பை முன்னெடுத்திருந்தனர்.

இந்தநிலையில், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சுகாதார அமைச்சர் வழங்கிய வாக்குறுதியை தொடர்ந்து, கடந்த புதன்கிழமை காலை முதல் குறித்த பணிப்புறக் கணிப்பு போராட்டத்தை சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தற்காலிகமாக கைவிட்டிருந்தது.

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை தமக்கும் வழங்க வேண்டுமென குறித்த சுகாதார தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பண்டிகைக் காலத்தில் குறைக்கப்படும்!

கொழும்பு, பெப். 20

எதிர்வரும் தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

டொலர் பெறுமதி குறைவடைந்துள்ள நிலையில், எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அத்தியாவசிய பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதேவேளை, இன்று முதல் லங்கா சதொச நிறுவனத்துக்கு தினமும் 1,000,000 முட்டைகள் விநியோகிக்கப்படும் என்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# தாயையும், மகளையும் வன்புணர்ந்து கொன்றவருக்கு மரண தண்டனை!

கொழும்பு, பெப். 20

இரத்தினபுரி, கொட்டகெதன பிரதேசத்தில் தாயையும் மகளையும் வல்லுறவுக்குள்ளாக்கி கொன்ற குற்றச்சாட்டில் குற்றவாளியான 'செயின் கில்லர்' நீல் லக்ஸ்மனுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

நீதிமன்றில் எரிந்து கொண்டிருந்த மின் விளக்குகளை அணைத்துவிட்டு, பிரதிவாதிக்கு மரண தண்டனை விதித்த நீதிபதி, வெலிக்கடை சிறைச்சாலையில் ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்படும் ஒரு நாள் மற்றும் நேரத்தில் சாகும் வரை அவரை தூக்கிலிடுமாறு உத்தரவிட்டார்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீதிமன்றில் 147 பக்கங்கள் கொண்ட தீர்ப்பை அறிவித்த நீதிபதி, தீர்ப்பில் கையெழுத்திட்ட பின் பேனாவை உடைத்தார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் இரத்து

கொழும்பு, பெப். 20

காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்து செய்வதற்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்களுக்கான அமைச்சு சார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் கடந்த வருடம் செப்டெம்பர் 21ஆம் திகதி ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

வேட்பாளர்கள் எதிர் கொள்ளும் சிரமங்களைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கெஹலியவின் உடல்நிலையை ஆராய்வதற்கு வைத்தியர் குழு!



கொழும்பு, பெப். 20

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் உடல் நிலையை கண்காணிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிக்குமாறு மாளிகாகந்தை நீதவான் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றில் ஆஜராக முடியாத வகையில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் சுகயீனமடைந்துள்ளதாக கூறப்படுவது தொடர்பில்உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் மனுவொன்றை சமர்ப்பித்துள்ளார்.

இந்த மனுவை ஏற்று நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

அதன்படி, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் உடல்நிலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற 'இம்யூனோகுளோபின்' எதிர்ப்பு மருந்துகளை இறக்குமதி செய்து அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகித்ததன் மூலம் பல மில்லியன் ரூபா மோசடி செய்து நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் 15ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக விருந்த நிலையில், நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியாத அளவுக்கு அவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும் சிறைச்சாலை வைத்தியசாலை வைத்தியரின் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (அ)

# சிறுமிகளை போன்று சிறுவர்களை பாதுகாக்கவும் வருகின்றது சட்டம்

## 20 ஆண்டுகள் சிறை

கொழும்பு, பெப். 20

சிறுமிகளை பலாத்காரம் செய்பவர்களுக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்குவதை போன்று சிறுவர்கள் மீது பலாத்காரம் மேற்கொள்வோருக்கும் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையை விதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நீதி அமைச்சு வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இப்போது வரை, சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்வது கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் என வகைப்படுத்தப்பட்டுள்ள போதும், குற்றவாளிகளுக்கு அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது.

எனினும் சிறுவர்களை பலாத்காரம் செய்யும் குற்றம் தொடர்பிலான சர்வதேச சட்டங்களைக் கருத்தில் கொண்டு இலங்கையிலும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் சட்டப்பூர்வ கற்பழிப்பு தொடர்பான சட்டங்களையும் நீதி அமைச்சு திருத்தியுள்ளது.

தற்போது, 16 வயதுக்குட்பட்ட சிறுமியுடன் உடலுறவு கொள்வது என்பது குறித்த சிறுமியின் சம்மதத்துடன் அல்லது இல்லாமலேயே சட்டப்படி கற்பழிப்புக்கு சமமான தாகும்.

இருப்பினும், ஒரு காதல் உறவின் காரணமாக உடலுறவு கள் அமையும் நிகழ்வுகளையும் அதிகாரிகள் அவதானித்துள்ளனர்.

அதன்படி, 14-16 வயதுடைய சிறுமிகள் மற்றும் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு இடையிலான சட்டரீதியான பலாத்கார வழக்குகள் தொடர்பாக தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை மேல்நீதிமன்றத்திற்கு வழங்கும் வகையில் சட்டத் திருத்தத்தை நீதி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போது, சட்டப்படி கற்பழிப்பு குற்றத்திற்கு உள்ளாகும் நபருக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இரு தரப்பினருக்கும் இடையே காதல் உறவு இருந்ததாகவும், அவர்கள் சம்மதத்துடன் உடலுறவில் ஈடுபட்டதாகவும் நீதிமன்றம் திருப்தி அடைந்தால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஒத்தி வைக்கப்பட்ட 10 ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்க இந்தத் திருத்தம் உதவும் என்றும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சுற்றுலாத்துறை மேம்படுத்தல் மட்டக்களப்பில் கூடி ஆராய்வு



மட்டக்களப்பு, பெப். 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் முதலீட்டாளர்களுடனான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வின், மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்து உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் சுற்றுலா விடுதிகள், உணவகங்கள் போன்றவற்றை அமைத்தல் மற்றும் முகத்துவாரத்தில் அமைந்துள்ள வெளிச்ச கோபுரத்தை புனரமைப்பு செய்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தவிசாளர் பி.மதனவாசன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், 243ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்டிம குமாரசிங்க, மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எந்திரி.சிவலிங்கம், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதிஸ்குமார், துறைசார் நிபுணர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# இலவச ஆயுர்வேத சிகிச்சை முகாம்

அம்பாறை, பெப். 20

மதுரங்குளி நல்லாந்தழுவை ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் இலவச ஆயுர்வேத சிகிச்சை முகாம் ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மத்திய மருந்தகத்தின் வைத்தியர் நிழ்வானா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை முன்னாள் வட மேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம். நியாஸ் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்துள்ளார்.

இலவச சிகிச்சை முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்த பரிசோதனை, நிரை பார்த்தல், ஹிஜாமா, அக்குபஞ்சர் சிகிச்சை, தோல் நோய், குழந்தை நோய்கள் போன்ற வற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வைத்திய முகாமில் சுமார் 200க்கு மேற்பட்ட நோயாளர்கள் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# மட்டக்களப்பு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் புதிர் வழங்கும் நிகழ்வு!

மட்டக்களப்பு, பெப். 20

திருமூலநாயனாரால் சிவ பூமி என சிறப்பித்து கூறப்பெற்ற இலங்கைமணித் திருநாட்டில் வயலும் வயல் சார்ந்த மருதநிலப் பிரதேசமாய் நெற்செய்கைக்குப் பெயர்பெற்று விளங்கும் மட்டக்களப்பு படுவான்கரைப் பெருநிலத்தின் கண் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாய் தானாக தோன்றி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பாரம்பரிய முறைப்படி புதிர் நெல் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து புதுர் நெல் உள் வீதிவலமாக எடுத்து வரப்பட்டு சுவாமிக்கு புது அரிசியில் பொங்கல் படைக்கப்பட்டதை தொடர்ந்து புதுர்நெல் வழங்குதல் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்கு கொண்டு நெல்லினை பெற்றுக்கொண்டனர். (அ)

# மட்டக்களப்பு சதுரங்க குழுமத்தின் ஏற்பாட்டில் சதுரங்க சுற்றுப்போட்டி

மட்டக்களப்பு, பெப். 20

மட்டக்களப்பு சதுரங்க குழுமத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண வீரர்களுக்கான சதுரங்க சுற்றுப்போட்டியொன்று நடத்தப்படுகிறது.

முதற் தடவையாக கிழக்கு மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச ரீதியான தரப்படுத்தலுக்குட்பட்ட 'மேஜர்' தர போட்டியில், இரு பாலாரும் வயது வேறுபாடின்றி பங்குபற்றி வருகின்றனர்.

மாவட்டம் தோறும் நடைபெற்ற அறிமுகப் போட்டியில் தெரிவு செய்யபப்பட்டவர்கள் இவ் மேஜர் தர போட்டியில் போட்டியிடுகின்றனர்.

நடுவராக சர்வதேச தர சதுரங்கப் போட்டி நடுவர் திவாங்க திஸ்சேர கலந்து கொண்டுள்ளார்.

இச்சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டுவோர், தேசிய நிலையில் நடைபெறவுள்ள போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர். (அ)

# கிழக்கு மாகாண ஆளுநர் ஏற்பாட்டில் 55 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட்போர்ட்



திருமலை, பெப். 20

பாடசாலை மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 55 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட்போர்ட் வழங்கி வைக்கப்பட்டது.

பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையின் ஒத்துழைப்புடன் கிராமப்புற பாடசாலைகளுக்கு ஸ்மார்ட போர்ட் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக உணவுத் திட்டத்தின் ஊடாக மல்வத்தை பிரதேசத்தில் நிவாரணம்



அம்பாறை, பெப். 20

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 1262 குடும்பங்களுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் நேற்று மல்வத்தை பொது நூலகத்தில் நிவாரண பொதிகள் வழங்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மல்வத்தை, வளத்தாப்பிட்டி ஆகிய கிராமங்களுக்கான நிவாரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ் நிவாரணம் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்திக்க அபேயவிக்ரம கலந்து கொண்டு நிவாரண பொதிகளை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல் எம் அஸ்லம், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.என்.எம் சசீர், எம்.ஆர்.எம் பௌசான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலக உணவுத் திட்டமானது சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பொருளாதார நெருக்கடி காலகட்டத்திலும் சுமார் 7000 குடும்பங்களுக்கு நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை தற்போது அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்படும் நிவாரண வேலைத்திட்டத்தில் மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் 05 பிரதேச செயலகங்கள் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டது அதில் சம்மாந்துறை பிரதேச செயலகமும் ஒன்றாகும். (அ)




## ஆப்கானுக்கு எதிரான ரி-20; இலங்கை த்ரில் வெற்றி!

தம்புள்ளை, பெப். 20

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இருபது - 20 போட்டியில் இலங்கை அணி 4 ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கை வந்து 1 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 இருபது 0- 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கிலும் இலங்கை அணி கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரின் முதலாவது போட்டி சனிக்கிழமை நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19 ஓவரில் 160 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணியின் ஹசரங்கா 67 ஓட்டங்கள் எடுத்தார்.

ஆப்கானிஸ்தான் சார்பில் பரூக்கி 3 விக்கெட்களும், நவீன் உல் ஹக் மற்றும் ஓமர்சாய் ஆகியோர் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதையடுத்து 161 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது. அணித்தலைவர் இப்ராஹிம் சட்ரன் மட்டும் தனி ஆளாகப் போராடி அரைச்சதம் கடந்தார்.

கடைசி ஓவரில் வெற்றி பெற 11 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், ஆப்கானிஸ்தான் அணி 6 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இறுதியில், ஆப்கானிஸ்தான் 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 156 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் 4 ஓட்டங்களால் இலங்கை அணி திரில் வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பில் மதீஷா பத்திரண 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

## 147 வருட கிரிக்கெட் வரலாற்றில் சிக்ஸர்களால் புதிய சாதனை!

ராஜ்கோட், பெப். 20

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையே ராஜ்கோட்டில் நடைபெற்ற 3ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 22 சிக்ஸர்கள் விளாசப்பட்டு 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் புதிய உலக சாதனை படைக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் இந்திய வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஒரே இன்னிங்ஸில் 12 சிக்ஸர்களை விளாசினார். இதன் மூலம் ஓர் இன்னிங்ஸில் அதிக சிக்ஸர்கள் விளாசிய பாகிஸ்தான் வீரர் வாசிம் அக்ரமின் சாதனையை (1996இல் சிம்பாப்வேவுக்கு எதிராக) ஜெய்ஸ்வால் சமன் செய்தார்.

மேலும் 147 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இல்லாத அளவுக்கு 20 அல்லது அதற்கும் அதிகமான சிக்ஸர்களை டெஸ்ட் தொடரில் விளாசி புதிய உலக சாதனையை ஜெய்ஸ்வால் படைத்துள்ளார். இந்தத் தொடரில் இதுவரை அவர் 22 சிக்ஸர்களை பறக்கவிட்டுள்ளார். இதுவும் ஓர் உலக சாதனையாகும்.

மேலும், ஒரு டெஸ்ட் தொடரில் அணி சார் பில் அதிக சிக்ஸர்கள் விளாசப்பட்டதும் இந்தத் தொடரில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடரில் இதுவரை இந்திய அணி சார்பில் 48 சிக்ஸர்கள் அடிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்பு 2019இல் தென்னாபிரிக்க அணிக் கெதிரான இந்திய அணி 47 சிக்ஸர்கள் விளாசி யதே உலக சாதனையாக அமைந்திருந்தது. இதை தற்போது ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணியினர் முறியடித்துள்ளனர்.



# சர்வதேச இருபது - 20 லீக்: எம். ஐ. எமிரேட்ஸ் சம்பியன்!

டுபாய், பெப். 20

சர்வதேச இருபது - 20 லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் எமிரேட்ஸ் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

சர்வதேச இருபது - 20 லீக் கிரிக்கெட் தொடர் டுபாயில் நடந்தது. இதில் விளையாடிய 6 அணிகளில் மும்பை இந்தியன்ஸ் எமிரேட்ஸ், கல்ப் ஜெய்ண்ட்ஸ், அபுதாபி நைட் ரைடர்ஸ், துபாய் கேபிடல்ஸ் ஆகிய அணிகள் பிளே ஓவ் சுற்றுக்கு தகுதிபெற்றன.

நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் எமிரேட்ஸ் அணியும், டுபாய் கப்பிடல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டுபாய் கப்பிட்டல்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்களை குவித்தது.




இதில், நிகோலஸ் பூரன் 57 ஓட்டங்களும் பிளட்சர் 53 ஓட்டங்களும் முகமது வசீம் 43 ஓட்டங்களும் குசால் பெரேரா 38 ஓட்டங்களும் எடுத்தனர்.

தொடர்ந்து ஆடிய டுபாய் கப்பிட்டல்ஸ் 20 ஓவரில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 163 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் நிகோலஸ் பூரன் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் எமிரேட்ஸ் அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

ஆட்டநாயகனாக நிக்கோலஸ் பூரனும் தொடர் நாயகனாக சிக்கந்தர் ரஸாவும் தெரிவாகினர். (ஐ)

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் இந்தியா 434 ஓட்டங்களால் வெற்றி!



ராஜ்கோட், பெப். 20

இங்கிலாந்து அணிக்கெதிரான 3ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 434 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பெற்றது. இதன் மூலம் இந்திய அணி இந்தத் தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணி இந்தியா சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு போட்டிகள் முடிவடைந்த நிலையில் 1 - 1 என்ற நிலையில் தொடர் சமநிலையில் இருந்தது.

இந்த நிலையில், ராஜ்கோட்டில் 3ஆவது டெஸ்ட் போட்டி ஆரம்பமானது. முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 445 ஓட்டங்களும் இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களும் குவித்தன.

இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 126 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில் இந்திய அணி 3ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 196 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆம் நாள் ஆட்டத்தை /ப்மன் கில் 65 ஓட்டங்களுடனும், குல்தீப் யாதவ் 3 ஓட்டங்களுடனும் தொடங்கினர். குல்தீப் யாதவ் 27 ஓட்டங்ன்களுக்கு ஆட்டமிழந்தார்.

அதேநேரத்தில், தொடர்ந்து சிறப்பாக விளையாடிய /ப்மன் கில் 90 ஓட்டங்களைக் கடந்து சதத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக 91 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவர் ரன்-அவுட்டானார்.

இந்நிலையில் 3ஆம் நாள் ஆட்டத்தின்போது காயமடைந்து வெளியேறியிருந்த யஷஸ்வி ஜெய்ஸ்வால் களமிறங்கினார். அவருக்கு உறுதுணையாக சர்பிராஸ் கான் அதிரடியாக விளையாடினார்.

அதிரடியாக விளையாடிய ஜெய்ஸ்வால் சிக்ஸர்களாக பறக்கவிட்டார். அவரின் அதிரடி ஆட்டத்தால் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது.

தொடர்ந்து சிக்ஸர்களாக விளாசிய ஜெய்ஸ்வால் தனது இரட்டை சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் சர்பிராஸ் கான் 72 பந்துகளில் 68 ஓட்டங்கள் குவித்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 4 விக்கெட் இழப்புக்கு 430 ஓட்டங்களாக இருந்தபோது இந்திய அணி தனது 2ஆவது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

ஜெய்ஸ்வால், 236 பந்துகளில் 214 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதில் 14 பௌண்ட்ரிகளும், 12 சிக்ஸர்களும் அடங்கும். இதையடுத்து இங்கிலாந்து அணிக்கு 557 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இங்கிலாந்து அணியின் எந்தவொரு வீரரையும் இந்திய பந்துவீச்சாளர்கள் நிலைத்து நிற்கவிடவில்லை.

ஜடேஜா, பும்ரா, குல்தீப் யாதவ், அஸ்வின் ஆகியோரின் அபார பந்துவீச்சால் இங்கிலாந்து அணி நிலைகுலைந்தது.

ஜாக் கிராவ்லி 11, பென் டக்கெட் 4, ஒல்லி போப் 3, ஜோ ரூட்7, ஜானி பேர்ஸ்டோ 4, அணித்தலைவர் பென் ஸ்ரோக்ஸ் 15, பென் போக்ஸ்16, ரெஹான் அகமது 0, டாம் ஹார்ட்லி 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். கடைசி விக்கெட்டாக மார்க் வூட் 33 ஓட்டங்கள் எடுத்த நிலையில், ஜடேஜா பந்தில் ஜெய்ஸ்வாலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

39.4 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து அணி ஆட்டமிழந்தது. இதையடுத்து இந்த டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 434 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது.

இதன்மூலம் டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது.

இந்திய அணித் தரப்பில் ரவீந்திர ஜடேஜா 5 விக்கெட்களையும் குல்தீப் யாதவ் 2 விக்கெட்களையும் அஸ்வின், பும்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். (ஐ)

## டெஸ்ட் சம்பியன்ஷிப் இந்தியா இரண்டாமிடம்!

டுபாய், பெப். 20

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் 434 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி இமாலய வெற்றியை பதிவு செய்தது. இதனை அடுத்து, உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் 3ஆவது இடத்திலிருந்து 2ஆவது இடத்துக்கு இந்திய அணி முன்னேறியுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளி பட்டியல், நியூசிலாந்து - 75%, இந்தியா - 59.52%, அவுஸ்திரேலியா % 55%, பங்களாதேஷ் - 50%, பாகிஸ்தான் - 36.66%, மேற்கிந்தியத் தீவுகள் அணி - 33.33 %, தென்னாபிரிக்கா - 25.00%, இங்கிலாந்து - 21.87%, இலங்கை - 00.00. (ஐ)

# கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஜூனுக்குள் நிறைவு செய்வதே நோக்கம்

*ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்*



கொழும்பு, பெப். 20

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஜூன் மாதத்திற்குள் நிறைவு செய்வதே அரசாங்கத்தின் நோக்கம் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**

ஜூன் மாதத்திற்குள் 90 பில்லியன் அமெரிக்க டொலர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் மறுசீரமைக்கப்படும் என சியம்பலாபிட்டிய கூறினார்.

அண்மைக்காலமாக நாடு எதிர்கொண்டுள்ள மிகவும் சவாலான பொருளாதாரப் பிரச்சினை அரசாங்கத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை சலுகை முறையில் மீளச் செலுத்துவதற்கு கடன் வழங்குநர்களுடன் உடன்பாடுகளை எட்டுவதே அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் 90 பில்லியன் டொலர்களாக இருந்தன.

அதில் பாதி உள்நாட்டுக் கடனாகவும், மீதி பாதி வெளிநாட்டுக் கடனாகவும் இருந்தது. உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் இப்போது முழுமையாக நிறைவடைந்துவிட்டது. வெளிநாட்டு கடன்கள் பலதரப்பு மற்றும் இருதரப்பு கடன்கள் என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. பல கட்சிகளின் கடன் தொடர்ந்து செலுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், இருதரப்பு வெளிநாட்டு கடனை மறுசீரமைப்பு செய்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. நாடுகளுக்கிடையிலான கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கவும் நம்புகிறோம்.

இறையாண்மை பத்திரங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடையும். அத்துடன், இந்த நாட்டின் மிக மோசமான பொருளாதாரப் பிரச்சினையான கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டை ஜூன் மாதத்திற்குள் பூர்த்தி செய்வதே அரசாங்கத்தின் இலக்காகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)



# பாரத் லங்கா 10000 வீட்டு திட்டம் நுவரெலியாவில் நேற்று ஆரம்பம்

கொழும்பு, பெப். 20

பாரத் லங்கா 10,000 வீடுகள் திட்டத்தின் தேசிய வேலைத் திட்டத்துடன் இணைந்து நுவரெலியா ஸ்க்ரப் தோட்டத்தில் 30 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்படும் பாரத் லங்கா வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக நுவரெலியா ஸ்க்ரப் தோட்டத்தில் தற்காலிக வீடுகளில் தங்கியுள்ள முப்பது குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைச் செயலாளர்கள் வினோத் ஜி மற்றும் சட்டத்தரணி சிவன் ஜோதி யோகராஜா ஆகியோரின் தலைமையில் நேற்று காலை ஸ்க்ரப் தோட்டத்தில் நடைபெற்றது.

# இலங்கைக்கு விமானம் வழங்கவுள்ள அமெரிக்கா!

கொழும்பு, பெப். 20

இலங்கையின் கரையோர பாதுகாப்பிற்காக விமானம் ஒன்றை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. அமெரிக்க இராஜதந்திரி டோலண்ட் லூ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விசேட சந்திப்பொன்றில் கலந்து கொண்ட அவர், இலங்கைக்கு 'கிங் எயார்' விமானமொன்று வழங்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விமானம் இந்த வருடத்திற்குள் பெற்றுக்கொடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா இதற்கு முன்னர் இலங்கையின் கரையோரப் பாதுகாப்பிற்காக பாதுகாப்புப் படையினருக்கு படகுகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சாரத்திற்கான தேவை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 20

தற்போது நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக நாளாந்த மின்சாரத்திற்கான தேவை 3 முதல் 4 ஜிகாவோட் வரை அதிகரித்துள்ளதாக என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த கருத்துத் தெரிவிக்கையில் - இந்நாட்களில் நீர் மின் உற்பத்தி 21 வீதமாகக் குறைந்துள்ளது. அந்தவகையில் நாட்டில் தற்போது சூரியசக்தி மூலம் 4.5 வீத மின்சாரமும், காற்றாலை மூலம் 5 வீத மின்சாரமும், அனல் மின் உற்பத்தி மூலம் 64 வீத மின்சாரமும் பெறப்படுகின்றது. எனவே மக்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்- என்றார். (அ)

# சுகாதார அமைச்சு கூறினால் மட்டுமே வீட்டுக்குச் செல்வேன்

*கூறுகிறார் ருக்ஷான் பெல்லன*

கொழும்பு, பெப். 20

வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் என்னை வீட்டுக்குச் செல்லுமாறு கூற முடியாது. சுகாதார அமைச்சு கூறினால் மட்டுமே வீட்டுக்குச் செல்வேன் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

தான் 7 மணித்தியாலங்கள் வைத்தியசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக பலர் கூறினாலும் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை என்றும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவதினம் தான் வைத்தியசாலைக்கு கடமைகளுக்காக சென்றதாகவும் கடமைகளை முடித்துக் கொண்டு மாலை 5.30 மணியளவில் பொலிஸ் பாதுகாப்பில் வெளியேறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# நாவாந்துறை பிறீமியர் லீக் கோட்டை ரைகர்ஸ் சம்பியன்











யாழ்ப்பாணம், பெப். 20

டான் தொலைக்காட்சியின் பிரதான அனுசரணையில் நாவாந்துறை பிறீமியர் லீக் தொடரில் கோட்டை ரைகர்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைத் தன்வசமாக்கியது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்தத் தொடர் காலை முதல் நடைபெற்றது.

வெண்கரம் அமைப்பின் தலைவர் மு. கோமகன் தலைமையில் ஆரம்பமான இந்தப் போட்டியில், ரொபாஸ் ஆடையகத்தின் உரிமையாளர் ஏ. ஜி. நஸ்றூன், ரில்கோ ஹோட்டல் முகாமைத்துவ பணிப்பாளர் திலகர் தியாகராஜா ஆகியோர் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக தயா இவன்ட் மனேஜ்மன்ட் உரிமையாளர் ப. தயாளன், சங்கானை சிவப் பிரகாச மகா வித்தியாலயத்தின் அதிபர் இ. சிறீதரன், கௌரவ விருந்தினர்களாக ஸ்கை பெஸ்ட் கோல்டிங்ஸ் உரிமையாளர் பிரியங்கன், கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் நாகராசா நந்த குமார், கலைவாணி சனசமூக நிலையத்தின் தலைவர் புவநேந்திர ராஜா அருணாத், ஸ்ரீ.சாருபன், சிவ லிங்கம் உதயகுமார், லிங்கப்பிள்ளை அருணன், பொ.பிரபாகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

7 அணிகள் கலந்து கொண்ட இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் கோட்டை ரைகர்ஸ் அணியும் என். பி. பந்தேர்ஸ் அணியும் மோதின. இதில் கோட்டை அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

இறுதிப் போட்டியின் நாயகனாக 3 விக்கெட்களை வீழ்த்தி கோட்டை ரைகர்ஸ் அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்த தர்சன் தெரிவானார்.

இதேநேரம், தொடர் நாயகனாக 141 ஓட்டங்களை எடுத்ததுடன் 18 விக்கெட்களையும் வீழ்த்திய கோட்டை ரைகர்ஸ் அணியின் கிருபாகரன் தெரிவானார். (ஐ)

## மக்களிடமிருந்து...

மீதான அதன் தாக்கமும்" என்ற தொனிப்பொருளில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமெரிக்க பொது இராஜதந்திரத்திற்கான துணைச் செயலாளர் எலிசபெத் எம். அலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை பத்திரிகை நிறுவனத்திற்கு நன்றி, நான் இன்று இங்கு இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊடகவியலின் கைவினைப் பணியில் நீங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பானது மிகவும் ஊக்கமளிக்கிறது.

இதை அறிந்து கொள்ளுங்கள்: நீங்கள் மேற்கொள்ளும் அபாரமான பணியை அமெரிக்கத் தூதரகம் முழுமையாக ஆதரிக்கிறது. நிச்சயமாக, ஒரு செய்தி தொடர்பாக அவ்வப்போது நாங்கள் முட்டிக் கொண்டாலும், அவையனைத்தையும் தாண்டி, நாங்கள் உங்களது மிகப்பெரிய ரசிகர்கள்.

சுதந்திரமாகவும் அச்சமின்றியும் ஊடகவியலைத் தொடர்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு என நாங்கள் நம்புவதால், உங்களது திறமைகளை கூர்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களில் நாங்கள் அனைவரும் ஈடுபட்டுள்ளோம்.

ஊடகவியலாளர்கள் நிரம்பிய ஒரு அறையில் நான் நிற்கையில், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாத்த தற்காகவும், அனைத்து குடிமக்களும் தங்களது கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் வெளிப்படுத்தும் உரிமையை அனுபவிப்பதை உறுதி செய்ததற்காகவும் நான் உங்களுக்கு நன்றிகூற விரும்புகிறேன்.

கடினமான நேரங்களிலும், தொடர்ந்து முன்னோக்கிச் செல்வதை நீங்கள் தொடர்வதுடன் கடினமான கேள்விகளையும் கேட்கிறீர்கள். உண்மையைத் தேடுவதற்கும், உயரமான முகடுகளிலிருந்து அதை உரத்துக் கூறுவதற்குமான உங்களது அர்ப்பணிப்பானது ஜனநாயகத்தின் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. உங்களது பணியினை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

உலகளாவிய ரீதியில், ஊடக சுதந்திரத்திற்கு எதிரான தீவிரமான மற்றும் அதிகரித்து வரும் சவால்களை நாம் காண்கிறோம். நிகழ்நிலையிலும் அகல்நிலையிலும் பத்திரிகை சுதந்திரத்திற்காக வாதிட்டு, உலகெங்கிலும் உள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது.

துரதிஷ்டவசமாக, இந்த அத்தியாவசிய சுதந்திரங்கள் உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இலங்கையில் எழுப்பப்பட்ட கரிசனைகளும் இதிலடங்கும். இணைய அணுகலை கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொதுமக்களிடமிருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப்படுத்தும்போது, அதற்கெதிராக நாம் பேச வேண்டும்.

இலங்கையின் பாராளுமன்றம் ஜனவரி மாதம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றியபோது, கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் அது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான விளைவுகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

கட்டுப்பாடற்ற கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான வாதங்கள் முன்வைக்கப்படுவது ஒரு பொதுவான விடயமாகும். அரசாங்கங்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதையும் பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ள ஊடகங்கள் பக்கச்சார்பானவை என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கட்டுப்பாடுகளற்ற நிலையில் கருத்துச் சுதந்திரமானது தவறான தகவல்கள் பரவுவதை ஊக்குவிக்கலாமென ஏனையவர்கள் கவலைப்படுகிறார்கள். கட்டுப்பாடுகளற்ற பத்திரிகைகள் பதற்றத்தைத் தூண்டி பாதுகாப்பு நிலைமைகளை பாதிப்பிற்குட்படுத்தலாமென வேறு சிலர் வாதிடுகின்றனர்.

ஊழல், வன்முறை மற்றும் அரசியல் முரண்பாடுகள் தொடர்பான தொடர்ச்சியான அறிக்கைகள் ஒரு நாட்டின் நற்பெயரைக் கெடுத்து, முதலீட்டு முயற்சிகளை பின்னடைவிற்குட்படுத்தி நாட்டின் அபிவிருத்தியைத் தடை செய்யலாமென்ற கரிசனைகளும் உள்ளன.

இருப்பினும் ஊடகங்களின் பக்கச்சார்பானது, தலைவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தும் பாதுகாவலர்களாக செயற்பட்டு, பொதுமக்களின் நலன்களை நோக்கி சாய்தல் வேண்டும். இலங்கைக்கும், அமெரிக்காவிற்கும், முழு உலகிற்கும் இக்கொள்கை பொருத்தமானதாகும் -என்றார். (அ)

## கல்வித்துறையை...

சீன அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் பாடசாலை மாணவர்களின் சீருடைக்குத் தேவையான துணியில் 80 வீதம், அதாவது 05 பில்லியன் ரூபா பெறுமதியான சீருடைத்துணிகள் எமக்கு கிடைத்துள்ளன. அவை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், இந்த ஆண்டுக்கான பாடசாலை கால அட்டவணை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள், உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அடுத்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் சுற்றறிக்கை மூலம் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும்.

மேலும், பாடசாலை செல்லாத பிள்ளைகள் குறித்து பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். சுகாதார அமைச்சின் தரவுகளின் படி, குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவதால் பாடசாலைக்குச் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் குறைகிறது. இது 0.17 வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் 10 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பை நிறுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வாரங்களில் நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தால், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும். 20,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளதால் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சேவையை விட்டுச் சென்ற மற்றும் வெளிநாடு சென்ற ஆசிரியர்கள் காரணமாக மாகாண மட்டத்தில் 13,500 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் ஆட்சேர்ப்பு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தால், விரைவில் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியும்-என்றார். (அ)

## இலங்கையின் இறையா...

இலங்கை இராணுவத்திற்கு ரோந்துப் படகுகளை வழங்கும். இலங்கையின் கரையோர எல்லைகளில் ரோந்து செல்ல உதவும் கிங் விமானத்தையும் இந்த ஆண்டு வழங்க உள்ளோம்,"

இந்தோ - பசிபிக் கடல்சார் கள விழிப்புணர்வு முயற்சியின் மூலம், தெற்காசியா உட்பட இந்த பரந்த பிராந்தியத்தைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு நிகழ்நேர வணிக செயற்கைக்கோள் தரவை அமெரிக்கா வழங்கும் - என்றும் அவர் மேலும் கூறினார்.

இது கடற்கொள்ளையர், போதைப் பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத மீன்பிடித்தல் ஆகியவற்றுக்கு எதிராக நாடுகள் எவ்வாறு தங்களைத் தற்காத்துக் கொள்ள இது உதவும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார மீட்சி தொடர்பான இலங்கையின் சமீபத்திய முன்னேற்றம் குறித்துப் பாராட்டிய டொனால்ட் லு, இந்தியா போன்ற பங்காளிகளுடன் இணைந்து நிர்வாகத்தின் இந்தோ-பசிபிக் மூலோபாயத்தின் வெற்றிக்கு இலங்கை ஒரு சிறந்த உதாரணம் என்றும் குறிப்பிட்டார். (அ)

## இலங்கையின்...

கட்சியின் மாவட்ட மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொய்யான அரசியல் வாக்குறுதிகள் வழங்கப்பட்டதில் ஜே.வி.பியினரும் பங்காளிகள். ஜே.வி.பி வரலாற்றில் அரசாங்கங்களை அமைக்கவும் கவிழ்க்கவும் உதவிய கட்சி.

1970 ஆம் ஆண்டில் ரோஹண விஜயவீர, சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு ஆதரவளித்தார். சிறிமாவோ ஆட்சிக்கு வந்த பின்னர் 71 ஆம் ஆண்டு கிளர்ச்சியில் ஈடுபட்டார்.

ஜே.வி.பியின் இந்த கிளர்ச்சி காரணமாக நாட்டின் பெருந்தொகையான இளைஞர்களின் உயிர்கள் அழிந்து போயின. முப்படைகளை சேர்ந்த பலர் உயிரிழந்தனர். நாட்டின் மத்திய தர வகுப்பு இல்லாமல் போனது.

இறுதியில் 1976 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்தனவுடன் ஜே.வி. பியினர் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர்.

ஜே.ஆர் வெற்றிப்பெற்றால், ஜே.வி. பிக்கு எதிரான விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானத்தை மாற்றி தமது கட்சியினரை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காக இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

இந்த வாக்குறுதிக்கு அமைய அன்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரோஹண விஜயவீரவை 1977 ஆம் ஜே.ஆர்.ஜெயவர்தன விடுதலை செய்தார்.

விடுதலை செய்த பின்னர் மீண்டும் 1983,84 ஆம் ஆண்டுகளில் அரசுக்கு எதிரான கிளர்ச்சியை ஆரம்பித்தால், தலைமறைவாகும் நிலைமையேற்பட்டது. தலைமறைவாகி, நாட்டின் வன்செயல்கள் மூலம் நாட்டை மீண்டும் அராஜக நிலைமைக்கு கொண்டு சென்றனர்.

1987,88ஆம் ஆண்டுகளில் ரணசிங்க பிரேமதாச ஆட்சிக்கு வருவதற்கு ஜே.வி. பியினர் உதவியதாக சிலர் கூறுகின்றனர். அதனை என்னால் உறுதியாக கூறமுடியாது. அது சமூகத்தில் நிலவும் கருத்து மாத்திரமே.

எப்படியே இறுதியில் ரணசிங்க பிரேமதாச நாட்டின் ஜனாதிபதியாக பதவிக்கு வந்தார். அவர் பதவிக்கு வந்து சிறிது காலத்தில் உயிரிழந்த பின்னர், டி.பி. விஜேதுங்க பதவிக்கு வந்தார்.

அவர் தடை செய்யப்பட்டிருந்த ஜே.வி. பியின் தடையை நீக்கினார். இதன் மூலம் அந்த கட்சிக்கு மீண்டும் ஜனநாயக அரசியலுக்குள் வர வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்.

1994ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜே.வி.பியுடன் இணைந்து பணியாற்றினார்.

அதன் பின்னர் வீடு வீடாக சென்று மகிந்த ராஜபக்ச மட்டுமே நாட்டில் இருக்கும் சிறந்த அரசியல்வாதி எனக் கூறினர் இதனால், மகிந்தவுக்கு வாக்களிக்குமாறு கேட்டனர்.

பிற்காலத்தில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காகவும் ஜே.வி.பியினர் பணியாற்றினர். ஜே.வி.பியே சரத் பொன்சேகாவையும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியது. அப்படியானால், அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஜே.வி.பி நாட்டின் அரசியலில் செயற்பாடுகளில் வலுவான அமைப்பாக இருந்துள்ளது.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கு நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும் என்றாலும் ஜே.வி.பியே இதற்கு பொறுப்புக் கூற வேண்டிய முதன்மையான கட்சி என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் - என்றார். (அ)

## சந்திரிகா...

கூட்டணியை உருவாக்குவதற்கான உடன்படிக்கை தொடர்பிலேயே இழுபறி ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதேவேளை, இந்தப் புதிய அரசியல் கூட்டணி சார்பிலான ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பான பிரச்சனை தீர்க்கப்படாதமையே இதற்கான காரணமென அறியமுடிகின்றது.

இந்தப் புதிய கூட்டணியில், அநுர யாப்பா, நிமல் லான்சா தலைமையிலான கட்சி, நசீர் அஹமட் தலைமையிலான கட்சி, பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தலைமையிலான கட்சி, பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தலைமையிலான கட்சி உட்பட மற்றும் பல கட்சிகள் கூட்டணி அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தன.

மேலும் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் புதிய கூட்டணி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்த நிலையில், அது மேலும் தாமதமாகும் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறான நிலையிலேயே, அரசாங்கத்தின் மூத்த அமைச்சரும் சட்டவல்லுனருமான விஜேதாச ராஜபக்ஷவின் பெயரை இப்பதவிக்கு கட்சியின் மூத்த தலைவர்கள், பரிந்துரைத்துள்ளனர்.

ஆனால், ஜனாதிபதி பதவிக்கு மிகவும் தகுதியானவர் தானே என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தொடர்ந்து வலியுறுத்தி வருவதால் கூட்டணியை இறுதி செய்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (அ)

## அல்லைப்பிட்டி...

படுகாயமடைந்தவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-03)

## திறன்மிக்க...

பொருளாதார வளர்ச்சி மெதுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் பொருளாதாரம் படிப்படியாக நிலையான வளர்ச்சி நிலைக்கு வரும்-என்றுள்ளது.

(அ)

## புலிகளுக்கு...

அந்தந்த சந்தர்ப்பங்களின் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே எனது கருத்துகளை வெளியிட்டிருந்தேன். மற்றபடி நான் மக்களை மையப்படுத்திய பொருளாதாரத் தன்னிறை குறித்த கொள்கையைக் கொண்டவன்.

மேற்கத்தேய நாடுகளுக்கு அடிமைச் சேவகம் புரிவதை எதிர்க்கும் நாட்டுப் பற்றாளன்-என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu

# பொன்சேகாவை நீக்க தடை!

கொழும்பு, பெப். 20

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை அக்கட்சியின் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்தடை உத்தரவு 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும்.

கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிட்டு, பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெண் அதிபரின் நியமனத்தை எதிர்த்து நேற்று போராட்டம்!

## யாழ். மத்திய கல்லூரி முன்பாக நடந்தது






யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாக பெண் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அடையாளப் போராட்டமொன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நேற்று காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

208 ஆண்டுகளைக் கடந்த ஆண்கள் பாடசாலையில் முதல் முறையாக பெண் அதிபரை நியமிப்பதற்கு ஆட்சேபனை செய்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் விசனம் தெரிவித்தனர்.

கல்லூரியின் முன்னாள் அதிபராக செயற்பட்ட எஸ்.இந்திரகுமாரை மீண்டும் நியமிக்குமாறும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அதிபர் வெற்றிடம் ஏற்பட்ட போது, பதில் அதிபராக இந்திரகுமார் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் பாடசாலை அதிபர் வெற்றிடத்தை நிரப்ப அண்மையில் கல்வியமைச்சினால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதில் 5 பேர் கலந்து கொண்ட நிலையில், எந்தவிதமான அரசியல் சிபாரிசும்- தலையீடும் இல்லாமல் - பாடசாலையின் பிரதி அதிபராக தற்போது கடமையாற்றி வரும் திருமதி சுகந்தினி செல்வகுமாரன் அதிக புள்ளிகள் பெற்றி அதிபராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலைமையில், திருமதி சுகந்தினி செல்வகுமாரன் பாடசாலை அதிபராக பதவியேற்க தயாரான போது, தற்போதைய பதில் அதிபர், வரும் புதன்கிழமை கடமைகளை ஒப்படைக்க அவகாசம் கோரியதாக பாடசாலை பழைய மாணவர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தநிலையில், குறித்த பிரச்னைக்கு விரைவில் தீர்வு பெற்றுத்தருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமி படுகொலைக்கு நீதி கோரி மன்னாரில் நேற்றுப் போராட்டம்!

## சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிப்பு



மன்னார், பெப். 20

**தலைமன்னார் ஊர்மனை கிராமம் பகுதியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி மன்னார் நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் கிராம மக்கள் நேற்று அமைதிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

சிறுமியின் மரணத்திற்கு தாமதம் இன்றி நீதி கிடைக்க வேண்டும் என கோரியும் விசேட நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று குறித்த வழக்கை விசாரணை செய்யக் கோரியும் ஊர்மனை கிராம மக்கள், மதத் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்கு", "விசேட விசாரணை பொலிஸ் குழுவை நியமி", "சிறுவர்களை உயிர் போல் காப்போம்", "எமது சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும்" போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு இடம்பெற்ற இந்த போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்றது.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி இரவு காணாமல் போன 10 வயது சிறுமி 16ஆம் திகதி காலை சடலமாக கண்டு பிடிக்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு கடந்த 16ஆம் திகதி காலை வருகைத்தந்த மன்னார் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஜெபநேசன் லோகு, பிரேத பிரிசோதனைக்காக சடலத்தை மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

அதன் பின்னர் சடலம் பெப்ரவரி 17ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு கொண்டுச் செல்லப்பட்ட சடலத்தை, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி செல்லத்துரை பிரணவன், குறித்த சிறுமி பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குறித்த சிறுமியின் பெற்றோர் புத்தளத்தில் தங்கியிருந்து தொழிலில் ஈடுபட்டு வருவதோடு, சிறுமி தனது அம்மம்மாவின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இதேவேளை, இந்த கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி மொஹமட் சாஜித் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சிறுமி சடலமாக கண்டுக்கப்பட்ட இடத்தை அண்மித்து காணப்படும் சிசிரிவி கமரா காணொளியை அடிப்படியடையாகக் கொண்டு அந்த பிரதேசத்தில் உள்ள தென்னந் தோப்பு ஒன்றில் பணியாற்றும் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட் டார்.

கடந்த 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட நபர், மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரல்!

கொழும்பு, பெப். 20

2024ஆம் ஆண்டுக்கான தரம் 1, 5, 6 மற்றும் உயர்தரம் தவிர்ந்த ஏனைய, இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள், அந்தந்த பாடசாலைகளில் நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பாடசாலைகளில் வெற்றிடங்கள் காணப்படுமாயின், அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களால், கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின்படி நேர்முகத் தேர்வுகளை நடத்தப்படும்.

பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அதிபர்களின் ஊடாக அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்படும்.

இதேவேளை, ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரமே பாடசாலைகளில் 6ஆம் தரத்துக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# ஐ. நா. விவசாய அமைப்பின் ஆதரவு இலங்கைக்கு தொடர்ந்தும் கிட்டும்!

## இலங்கை வந்த பணிப்பாளர் உறுதி

கொழும்பு, பெப். 20

உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆதரவு இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்ந்தும் வழங்கப்படும் என்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கியூ டொங்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கியூ டொங்கு ஆகியோருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்குரோத்து நிலையில் இருந்து இலங்கையை மீட்டெடுத்து பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு இதன்போது வாழ்த்து தெரிவித்தார்.

அத்துடன், உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆதரவு இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்ந்தும் வழங்கப்படும் என்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கியூ டொங்கு இதன்போது வலியுறுத்தியுள்ளார்.(அ)

# முட்டை விலை உயர்வு

கொழும்பு, பெப். 20

மரக்கறிகளின் விலை குறைந்துள்ள போதிலும் முட்டை ஒன்றின் சில்லறை விலை 70 ரூபாவாக அதிகரித்துள்ளதாகச் சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வியாபார நிலையங்களின் விற்கப்பட்ட மரக்கறிகளின் விலைகளின்படி , கடந்த காலங்களில் 3 ஆயிரம் ரூபாயாக இருந்த ஒரு கிலோ கெரட் 500 ரூபாவாகவும், போஞ்சி கிலோ 550 ரூபாவாகவும், கோவா 300 ரூபாவாகவும் , வெண்டைக்காய் 200 ரூபாவாகவும் , கத்தரிக்காய் 150 ரூபாவாகவும், வெங்காயம் 110 ரூபாவாகவும் முள்ளங்கி, நோகோல், வாழைக்காய் என்பவற்றின் விலைகள் 50 ரூபாவினாலும் குறைவடைந்துள்ளது.

பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் அதிகளவில் மரக்கறிகள் வரவழைக்கப்படுவதாகவும், வியாபாரிகளின் வருகையும் குறைந்துள்ளதாகவும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# புடினின் அரசியல் எதிரி நவால்னி: நீண்டகால சிறையில் மர்ம மரணம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

*மாஸ்கோவில் இருந்து கிழக்கே 1900 கிலோ மீட்டர் தொலைவில் ஆர்ட்டிக் பகுதியில் (Arctic Circle) உள்ள 'போலார் வொல்வ்' (Polar Wolf) தண்டனைக் காலனியில் மூன்று தசாப்த சிறைத்தண்டனை அனுபவித்து வந்த புட்டினின் அரசியல் எதிரி நவால்னியின் மர்ம மரணம் மேற்குலகின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.*

*ரஷ்ய அதிபர் புட்டினுக்கு எதிராக பல ரகசியங்களை உலகின் பார்வையில் தொடர்ந்து வெளிப்படுத்தியதால், ரஷ்யாவுக்கு வெளியில் வைத்தே அவர் மீது பல முறை தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. அவற்றில் பல விஷம் சார்ந்த தாக்குதல்கள் என்பதால், அப்போதெல்லாம் மருத்துவமனையில் உயிருக்கு போராடி நவால்னி மீண்டிருக்கிறார்.*

**சிறையில் மர்ம மரணம்**

*தற்போது ரஷ்ய அதிபர் புட்டினின் பிரதான அரசியல் எதிரியும், ரஷ்யாவின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அலெக்சி நவால்னி, ரஷ்ய சிறையில் இறந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.*

*"பல அரசியல் கைதிகளைப் போலவே நானும் ஆயுள் தண்டனையில் அமர்ந்திருக்கிறேன். இந்த ஆட்சியின் ஆயுட்காலம் மூலம் என் வாழ் நாள் அளவிடப்படுகிறது" என ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி முன்பு தெரிவித்திருந்தார்.*


*கடந்த வருட நவம்பர் இறுதியில் அலெக்ஸி நவால்னி சிறையில் இருந்து காணாமல் போனதாக அவரது ஆதரவுக்குழு தெரிவித்தது. ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் அரசை கடுமையாக விமர்சித்து வரும் எதிர்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி 2020ஆம் ஆண்டு விஷத் தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.*

**புட்டினின் அரசியல் எதிரி நவால்னி**

*47 வயதான அலெக்ஸி நவால்னியின் வழக்கறிஞர்கள் கடந்த வருட நவம்பரில் சிறையில் அடைக்கப்பட்ட ரஷ்ய எதிர்க் கட்சித் தலைவருடனான தொடர்பை இழந்துவிட்டதாகக் கூறினர். பின்னர் சிறையில் நோய்வாய்ப்பட்டு இருப்பதாக அறியப்பட்டது.*

*தீவிரவாத சமூகத்தை உருவாக்குதல், தீவிரவாத நடவடிக்கைகளுக்கு நிதியளித்தல் மற்றும் பல குற்றங்களில் ஈடுபட்டதாக நவால்னிக்கு 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஏற்கனவே மோசடி மற்றும் அவர் மறுக்கும் பிற குற்றச்சாட்டுகளில் அதிகபட்ச பாதுகாப்பு சிறைகளில் 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார்.*

*சில மாதங்களுக்கு முன்பாக கடுமையான உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு நவால்னி இருப்பதாக கூறப்பட்டது.*



> *புட்டினுக்கும் அவரது அதிகாரத்துக்கும் அஞ்சாதவர். ரஷ்யாவுக்கு வெளியேயும் அபிமானிகளை சேர்ந்திருந்தவர். நவால்னியின் துணிச்சலும், சாதுரியமும் ரஷ்யாவுக்கு வெளியேயும் எப்போதும் பேசப்படுவர்*

ரஷ்யாவின் எல்லைக்கு வெளியே மட்டுமன்றி உள்ளேயும் எதிர்ப்பாளர்களை விரும்பாதவர் ரஷ்ய அதிபர் விளாதிமிர் புட்டின்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மீதான அவரது விமர்சனத்தை அடக்குவதற்கான அரசியல் சூழ்ச்சி முயற்சி என்று அவரது கைது மற்றும் சிறைவாசம் என நவால்னியின் ஆதரவாளர்கள் கூறிவந்தனர்.


கடந்த சில ஆண்டுகளாக புடினுக்கு அரசியல் ரீதியாக பெரும் அழுத்தத்தை கொடுத்தவரே அலெக்சி நவால்னி. பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் புட்டின் அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அலெக்சி நவால்னி இறந்தது ரஷ்ய அரசால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் நவால்னி இறந்த தகவல் உறுதியானபோதும், அதன் பின்னணி காரணம் உள்ளிட்ட தகவல்கள் இன்னமும் வெளியாகவில்லை.

அவர் இறந்ததாக கூறப்பட்டாலும், கடந்த சில மாதங்களாகவே நவால்னி சிறைவாசம் குறித்தும், அவர் உயிரோடு இருக்கிறாரா என்ற கேள்வியும் நவால்னியின் ஆதரவாளர்களால் தொடர்ந்து எழுப்பப்பட்டு வந்தது.

**எதிர்கால ரஷ்யாவின் தலைவர்**

'எதிர்கால ரஷ்யா' என்ற அரசியல் கட்சியின் தலைவரும், வழக்கறிஞர், ஊழல் எதிர்ப்பாளர், என பல முகம் கொண்டவர் அலெக்ஸி நவால்னி. எதிர்க்கட்சியினர் மத்தியில் அதிக செல்வாக்கு கொண்டவராகவும், புட்டினுக்கு நிகரான மக்கள் வசீகரமும் கொண்டவர்.



முக்கியமாக புட்டினுக்கும் அவரது அதிகாரத்துக்கும் அஞ்சாதவர். ரஷ்யாவுக்கு வெளியேயும் அபிமானிகளை சேர்த்திருந்தவர். நவால்னியின் துணிச்சலும், சாதுரியமும் ரஷ்யாவுக்கு வெளியேயும் எப்போதும் பேசப்படுவர்.

புட்டினின் ரஷ்யாவுக்கு அப்பாலான சொத்துக்களை அம்பலப்படுத்தியதில், அலெக்சி நவால்னி அரசின் கடும் சீற்றத்துக்கு ஆளாகி, கிட்டத்தட்ட வாழ் நாள் சிறைவாசத்துக்கு உட்பட்டார்.

சிறையில் நவால்னி இறந்தால் அந்தப் பழி அரசின் மீதே விழும். தற்போது சிறையில் நவால்னி இறந்திருப்பது அவரது தனிப்பட்ட உடல் நிலை சார்ந்த காரணங்களினாலா அல்லது உளவுச்சதி ஏற்பாடா என்பது தெரியவில்லை. அப்படியே இருப்பினும் அவை வெளியுலகுக்கு தெரியவும் வாய்ப்பில்லை.

தற்போதும் நவால்னி ஆதாரவாளர் கள், சிறையில் நவால்னி கொல்லப்பட்டதாகவே புட்டின் அரசு மீது குற்றம் சாட்டி உள்ளனர். ஆட்சி மற்றும் அதிபர் மாற்றத்துக்கு இடமின்றி தொடர்ந்து அதிகாரத்தை கையில் வைத்திருப்பதால், புட்டின் மீதான அரசியல் எதிரிகளின் விமர்சனம் ரஷ்யாவில் இப்போது காணப்படுகிறது.

**மார்ச் 2024 இல் ரஷ்ய தேர்தல்**

மார்ச் 2024 இல் ரஷ்யாவின் தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடப் போவதாக புட்டின் அறிவித்தன் பிறகு நவால்னியின் மர்ம மரணம் நிகழ்ந்துள்ளது. மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடும புட்டின் குறைந்தபட்சம் 2036 வரை அவர் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த ஆட்சியின் போது புட்டினின் சட்டப்பூர்வத்தன்மைக்கு மிகவும் கடுமையான அச்சுறுத்தலாக நவால்னி இருந்தார். அத்துடன் அரசாங்க எதிர்ப்பு தெரு ஆர்ப்பாட்டங்களை பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டது.

இந்த சூழலில், தனது 47 வயதில் மர்ம மரணமடைந்திருக்கிறார் அலெக்ஸி நவால்னி. ரஷ்யாவின் அவிழ்க்க முடியாத மர்மங்களில் ஒன்றாக தற்போது அலெக்ஸி நவால்னியின் மரணமும் சேர்ந்திருக்கிறது.









# இந்தியா:

சல்மான் ரவி

# 2020-2024 விவசாயிகள் போராட்டம் ஓர் ஒப்பீடு: நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை பாதிக்குமா?

இந்தியாவில் மக்களவை தேர்தல் நடப்பதற்கான நாட்கள் வெகு தொலைவில் இல்லை. அதற்கான தேதிகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் கூட, புதிய அரசு இன்னும் 3 மாதங்களில் அமையலாம் என்று நம்பப்படுகிறது.

இதற்கு மத்தியில், இந்தியாவின் விவசாயிகள் மீண்டும் தங்களது வீரியமிக்க போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

தேர்தலுக்கு முன்பு தொடங்கப்பட்டுள்ள இந்த போராட்டம் பாஜகவிற்கு கடுமையான சவாலாக அமையுமா? என்ற விவாதம் அரசியல் வட்டாரத்தில் தலைதூக்கியுள்ளது.

அதே சமயம், 2020ஆம் ஆண்டு நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தை முன்னின்று நடத்திய விவசாய அமைப்புகள் எதுவும் தற்போதைய போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்பதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.



அதில் பாரதிய கிஷான் யூனியன் மற்றும் அகில இந்திய கிஷான் சபாவும் அடங்கும். பாரதிய கிஷான் யூனியன் தற்போது நடைபெற்று வரும் போராட்டத்தில் பங்குபெறவில்லை என்றும், அதே சமயம் அதை எதிர்க்கவில்லை என்றும் கருத்து தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பேசியுள்ள பாரதிய கிஷான் யூனியனை சேர்ந்த ராகேஷ் டிகாயித், தேர்தலில் எந்த கட்சியை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்பது குறித்து எங்கள் அமைப்புக்கு எந்த தொடர்பும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும், எங்களது அமைப்பின் நோக்கம் விவசாயிகளுக்காக போராடுவது மட்டுமே தவிர, தேர்தலுக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என்று கூறியுள்ளார் அவர்.

"நாங்கள் விவசாயிகளின் கோரிக்கைகளுக்காக போராடி வருகிறோம். முதலில் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து அதை திரும்பபெற கோரி போராட்டம் நடத்தினோம். தற்போது இதர கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த முறை சன்யுக்த் கிசான் மோர்ச்சா (அரசியல் சாராதது), பிகேயு (ஷாஹீத் பகத் சிங்), பிகேயு (ஏக்தா சித்துபூர்), கிசான் மஸ்தூர் மோர்ச்சா, பாரதிய கிசான் நௌஜவான் யூனியன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட இயக்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

பல்பீர் சிங் ராஜேவால் மற்றும் ஜக்ஜித் சிங் தலேவால் ஆகியோரின் பிகேயு பிரிவுகள் இந்த போராட்டத்திலிருந்து விலகி நிற்கின்றன.

**இந்த போராட்டத்தில் என்ன வேறுபாடு உள்ளது?**

பிரபல எழுத்தாளரும் இந்துத்துவ சிந்தனையாளருமான ராஜீவ் துலி இது குறித்து கூறுகையில், இம்முறை நடைபெறும் இயக்கத்தில் பஞ்சாபின் விவசாய அமைப்புகள் மட்டுமே ஈடுபட்டுள்ளன, அதிலும் எல்லா அமைப்புகளும் இல்லை என்று தெரிவிக்கிறார்.

தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு பஞ்சாப் அரசின் ஆதரவு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

**ஆனால், இந்த போராட்டம் பாஜகவை பாதிக்குமா?**

இதற்கு பதிலளித்த அவர், இதில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு மத்திய அரசே இலக்கு. ஆனால், அதில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதுவும் இருப்பது போல் தெரியவில்லை என்கிறார்.

அதேசமயம் எம்மோடு பேசிய மத்திய வேளாண் அமைச்சர் அர்ஜூன் முண்டா, தற்போது நடந்து வரும் போராட்டத்தை காங்கிரஸே தூண்டி விட்டுள்ளதாக விமர்சனம் செய்துள்ளார்.

இதுகுறித்து அவர் பேசுகையில், "2014க்கு முன்பு வரை காங்கிரஸ் அரசு பட்ஜெட்டில், விவசாயிகளுக்காக வெறும் 27,000 கோடியை மட்டுமே ஒதுக்கியது. ஆனால், தற்போதைய பாஜக அரசோ அதை ஐந்து மடங்கு உயர்த்தி 1,24,000 கோடியாக ஒதுக்கியுள்ளது" என்றார்.

மேலும் பேசிய அவர், தற்போதைய போராட்டம் அரசியல் நோக்கில் மக்களவை தேர்தலை குறிவைத்தே தொடங்கப்பட்டுள்ளது என்றும், காங்கிரஸே விவசாயிகளை தூண்டி விட்டுள்ளது என்று குற்றம்சாட்டியுள்ளார்.

**வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் அதிருப்தி**

2020 போராட்டத்தை முன்னெடுத்த அகில இந்திய கிஷான் சபா தற்போதைய போராட்டத்தில் பங்கேற்கவில்லை. அதன் தலைவர் விஜூ கிருஷ்ணனிடம் இதுகுறித்து பேசினோம்.

அப்போது பேசிய அவர், "13 மாதங்களுக்கு முன்பு மத்திய அரசும், பிரதமர் மோடியும் மூன்று வேளாண் சட்டங்களை திரும்ப பெறுவதாக அறிவித்தனர். அதோடு சேர்த்து குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்டம் இயற்றப்படும் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள குற்ற வியல் வழக்குகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று உறுதி கொடுக்கப்பட்டது." என்று கூறினார்.



மேலும், " எம்எஸ்.சுவாமிநாதன் அறிக்கையை அமல்படுத்துவதற்கான உறுதியும் வழங்கப்பட்டது. அதே சமயம் போராட்டத்தின்போது, கொல்லப்பட்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்தும் பேசப்பட்டது. ஆனால், அதை செய்யவில்லை"

"அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றும் என 13 மாதங்களாக நாங்கள் காத்திருந்தோம். ஆனால், இன்னமும் நிலைமை அப்படியேதான் இருக்கிறது. எனவே தான் சில மாதங்களாக மீண்டும் விவ சாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கும் தேர்தலுக்கு சம்பந்தமில்லை. விவசாயிகளின் பிரச்னை அரசியலில் இருந்து வேறுபட்டது." என்று தெரிவித்துள்ளார் விஜூ கிருஷ்ணன்.

**அரசு தரப்பில் அறிவிப்பு ஏதும் வெளியாகுமா?**

கடந்த விவசாயிகள் போராட்டத்தில் கலந்து கொண்ட பெரிய அமைப்புகள் எதுவும் தற்போதைய 'டெல்லி சலோ' இயக்கத்தில் கலந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் அனைத்தும் மத்திய அரசின் ஆதரவு பெற்று இயங்குவது போல் தெரிகிறது என்று கூறுகிறார் மூத்த பத்திரிகையாளரும், அரசியல் நிபுணருமான ஜெய்ஷங்கர் குப்தா.

மேலும், "தற்போதைய 'டெல்லி சலோ' இயக்கத்தை முன்னெடுத்து வரும் அமைப்புகள் அனைத்தும் பாஜகவோடு நெருக்கமானவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை" என்கிறார் அவர்.

இந்த போராட்டத்தின் மூலம் விவசாயிகளுக்காக பெரிய அறிவிப்பு ஒன்றை அறிவித்து பாஜக தனது 'மாஸ்டர் ஸ்ட்ரோக்' உத்தியை பயன்படுத்தலாம் என்ற தனது கருத்தையும் அவர் வெளிப்படுத்துகிறார்.

இதற்கு உதாரணமாக, தேர்தலுக்கு சற்று முன்பாக மறைந்த சௌத்ரி சரண் சிங் மற்றும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆகியோருக்கு பாரத ரத்னா விருது கொடுப்பதையும் இதோடு தொடர்புபடுத்தி பார்க்க வேண்டும் என்ற வாதத்தை முன்வைக்கிறார் அவர்.

**கிராமின் பாரத் பந்த்**

இந்த முறை நடைபெறும் போராட்டத்தில் அனைத்து விவசாய அமைப்புகளும் கலந்து கொள்ளாததால், இந்த போராட்டம் தேர்தலில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவது போல் தெரியவில்லை என்கிறார் ஜெய்சங்கர் குப்தா.

மேலும் பேசிய அவர், ஒரு மாநிலத்தில் ஒரு சில இயக்கங்களால் மட்டும் நடத்தப்படும் போராட்டத்தால், மற்ற மாநிலங்களில் தாக்கம் ஏற்படாது என்கிறார்.

மக்களவை தேர்தலில் பாஜகவுக்கு இது பெரிய சவாலாக இருக்காது. ஆனால், இந்துத்வா சிந்தனையாளரான ராஜிவ் துலி இதை மறுக்கிறார். மேலும், 60 வயதுக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு ரூ.10,000 ஓய்வூதியம் வழங்குவது எந்த அரசின் அதிகாரத்திலும் இல்லை என்கிறார் அவர்.

யார் விவசாயி என்பதே இங்கு பெரும் கேள்வியாக இருக்கிறது என்கிறார் அவர். பெரு முதலாளிகள் மற்றும் செல்வாக்கு நிறைந்தவர்கள் விவசாய நிலங்களை வாங்குகின்றனர்.

எனவே, "அவர்கள் அனைவரையும் விவசாயிகள் என்று அழைக்கமுடியுமா? அதற்கான அளவுகோல் என்ன? என்ற கேள்வியை முன்வைக்கும் அவர், அது குறித்த தெளிவே இங்கு இல்லை என்கிறார். சுப்ரியா சுலே மற்றும் ப.சிதம்பரம் ஆகியோரும் கூட விவசாயிகள் தான். எனவே, இதை அரசு ஆதரவில் நடக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)



# 2020-2024 விவசாயிகள் போராட்டம்...



போராட்டம் என்று அழைப்பது உண்மைக்கு புறம்பானது” என்று கூறுகிறார் அவர்.

பிப்ரவரி 16-ம் தேதி விவசாயிகள் மற்றும் தொழிலாளர் அமைப்புகள் இணைந்து “கிராமின் பாரத் பந்த்” அழைப்பு விடுத்துள்ளன, இதில் பங்கேற்க உள்ளதாக அனைத்து விவசாய அமைப்புகளும் அறிவித்துள்ளன.

அதுதவிர, எதிர்கட்சிகளும் இந்த போராட்டத்தை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளன.

முந்தைய விவசாய அமைப்புகள் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருக்கும் நிலையில், ராகேஷ் திகாயத் டெல்லிக்கு வந்த பிறகு அனைத்து அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், ஹரியானாவில் விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகள் மற்றும் ரப்பர் தோட்டாக்கள் வீசப்பட்டது, ஆணிகள் மற்றும் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்து தற்போது அனைத்து அமைப்புகளும் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக கூறியுள்ளார்.

**விவசாயிகள் போராட்டத்தின் தாக்கம்**

வியாழக்கிழமையன்று, பிகேயு (உக்ர ஹான்) நான்கு மணி நேரத்திற்கு ரயில் மறியல் செய்ய உள்ளதாக அறிவித்தது.

அதே நேரத்தில் பேராசிரியர் தர்ஷன் பால் தலைமையிலான கிராந்திகாரி கிசான் யூனியனும், ஹரியானாவில் விவசாயிகளுக்கும் காவல்துறையினருக்கும் இடையிலான மோதலுக்குப் பிறகு அவசரக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. அதில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குர்னாம் சிங் சதுனியின் அமைப்பு இந்த போராட்டத்தில் இதுவரை பங்கேற்கவில்லை. ஆனால் தற்போதைய நிலைமையை ஆராய்ந்து தனது அமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கையை தீர்மானிக்க ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார் அவர்.

சண்டிகரைச் சேர்ந்த அரசியல் விமர்சகரான விபின் பப்பி, தற்போது நடந்து வரும் விவசாய அமைப்புகளின் போராட்டம் ஒரேயொரு தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்துவதாக கூறியுள்ளார்.

அதாவது இந்த போராட்டத்தின் மூலம், தற்போது ஷிரோமணி அகாலி தளம் மற்றும் பாஜக கூட்டணிக்கான வாய்ப்பு மேகமூட்டம் போல் கலைந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த முறை நடந்த விவசாயிகள் போராட்டத்தில், பஞ்சாபை சேர்ந்த விவசாயிகளிடமிருந்து அதிக எதிர்ப்பு எழுந்ததால், சிரோமணி அகாலிதளம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

ஆனாலும், பாஜகவிற்கு பஞ்சாபில் அதிக செல்வாக்கு இல்லை என்றும், தற்போது நடந்து வரும் விவசாயிகள் இயக்கத்திற்கு ஹரியானா அல்லது வேறு எந்த வடஇந்திய மாநிலங்களில் பெரிய ளவு செல்வாக்கு இல்லை எனவும் அவர் கூறுகிறார்.




மேலும் பேசிய விபின் பப்பி, தேர்த லுக்கு முன் மத்திய அரசு மற்றும் பாஜக விற்கு அழுத்தம் தர விவசாயிகள் முயற் சித்து வருகின்றனர். ஆனால், அது பெரியளவில் பலனளிக்காது. காரணம் இந்த முறை பாஜக தன்னுடைய முழு பலம், மற்றும் நம்பிக்கையோடு களம் இறங்குகிறது என்று கூறியுள்ளார்.

ஆனால், இரண்டு வருடங்களுக்கு முன்பு டெல்லியின் எல்லைப்பகுதிகளில் விவசாயிகளின் வலுவான போராட்டம் நடைபெற்றது. அந்த சமயத்தில் உத்தரப் பிரதேசத்தின் தேர்தலும் நடக்க இருந்தது.

அந்த இயக்கத்தில் ராகேஷ் திகாயித்தின் பாரதிய கிசான் யூனியனும் முக்கிய பங்கு வகித்தது.

அந்த சமயத்தில் இந்த போராட்டத்தால், உத்தரபிரதேச தேர்தலில் பாஜக தோற்க நேரிடும் என்று கூட நிபுணர்களால் கூறப்பட்டது.

ஆனால், உத்தரபிரதேசத்தில் விவசாயிகள் மீது கார் ஏற்றி கொல்லப்பட்ட சம்பவம் அரங்கேறியிருந்த போதிலும் கூட, மேற்கு உத்தரபிரதேசம் மட்டுமல்லாது லக்கிம்பூர் கேரியிலும் பாஜக நல்ல வெற்றியை பெற்றதாக கூறுகிறார் அவர்.

இதற்காக உத்தரபிரதேச தேர்தல் வாக்குப்பதிவுக்கு முன்பாகவே மூன்று வேளாண் சட்டங்களையும் மத்திய அரசு திரும்பப்பெற வேண்டியிருந்தது.

முன்பு நடந்த போராட்டத்தில் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்துவதில் அரசிடம் சில குறைபாடுகள் இருந்தன. ஆனால், இந்த முறை மத்திய வேளாண் அமைச்சர் அர்ஜூன் முண்டா, வணிகத்துறை அமைச்சர் பியூஸ் கோயல், மற்றும் உள்துறை இணைய மைச்சர் நித்யானந் ராய் ஆகியோர் இரண்டு கட்டங்களாக விவசாய சங்க பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

